"இரங்கு நிலைகொண்ட தமிழ் ஏற்றகுறை
தவிர்த்திட நீர் எழுச்சி கொள்வீர்"

எழில்

கவின் 2 | ஓகஸ்டு — செப்டம்பர் 1970 | காட்சி 5, 6

நிர்வாக ஆசிரியர்:
மணி. அரியநாயகம்.

இருதிங்கள் வெளியீடு

அலுவலகம்:
"எழில்"
13, ஒபன் சைட்,
தெஹிவளை.

கிளை:
97/7, பீச்ரோட்,
யாழ்ப்பாணம்.

அட்டைப்படம்:
ஊரிக்காடு திரு A. நடராஜா.

எழிலில் வெளிவரும் கதைகள் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே; கட்டுரைகளில் வெளிவரும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.
— ஆசிரியர்.

இந்த இதழில்...

- தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளின் தடை
- பேட்டி: செல்வி. ந. பிரா ணேஸ்வரி
- மன்னிக்க வேண்டுகிறேன்
- சிறுகதை: நீலநிற நைலெக்ஸ் சாரி
- இசைமாலை — 2:
- கவிதையாஞ்சல்
- ஆசைக்கனவு
- சிந்திக்க வேண்டுகிறோம்
- வித்துவான் வேந்தனார்
- தென்னன் பதி
- சங்கத்தமிழரின் காதல் வாழ்க்கை
- மாவிட்டபுரத்திலா முருகனே வணங்கப் போகின் நீர்கள்
- தமிழரசி — நாடகம்
- எழுச்சி
- எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. T. சம்பந்தர்

56, K. K. S. ரோட்,

யாழ்ப்பாணம்.

எங்களிடம்

றங், சூட்கேஸ், மெத்தை

தலையணைவகைகளும்

மற்றும் வீட்டுப்பாவனைக்குகந்த

தேயிலையும்

சகாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நங்கையர் விரும்பும் நவநாகரீக
நகைகளுக்கும் வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

கே. என். எம். மீரான் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 585

Visit

K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT
'SOVEREIGN PALACE'

KANNATHIDDY, JAFFNA.

Dial: 585

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளின் தடை!

சரவணையூர் சம்பந்தன்

இந்தியாவிலிருந்து இந் நாட்டுக்கு இறக்குமதியாகும் தமிழ்ச் சஞ்சிகைகளெல்லாம் உடனடியாகத் தடைசெய்யப்படவேண்டுமென, இங்குள்ள ஓர் அரசியல் சார்புள்ள சில எழுத்தாளர்கள் விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை அரசினர் அச் சஞ்சிகைகளுக்குத் தடை விதிப்பதாக இப்பொழுது தினமும் புதினப்பத்திரிகைகளில் செய்திகள் அடிபடுகின்றன.

மக்களின் நலனில் அதிக அக்கறை கொண்டுள்ள மக்கள் அரசாங்கம் மக்களின் ஒருசிறு கூட்டத்தினர் போடும் கூக்குரலுக்குக்கூடச் செவி சாய்ப்பதென்றால், அது நாட்டு நலனை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கவேண்டும்!

இறக்குமதி மோசடிகள்

இறக்குமதி மோசடிகள், இந்தப் பத்திரிகைகள் இறக்குமதியிலும் சம்பந்தப்பட்டிருக்கிறது: இறக்குமதி மோசடிகளை எந்த ஓர் அரசாங்கமும் சகித்துக் கொண்டிருக்க முடியாது: அபிவிருத்தியடையாத, சிறு நாடுகளிலே, உள்ளூர்ப்பணம் விரயமாவது உண்மையில் சகிக்கமுடியாத ஒரு கொடுமையாகும்! உடனடியாகத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இறக்குமதி மோசடிகள் முறியடிக்கப்படவேண்டும்.

இந்திய வியாபாரிகள்

இந்திய வியாபாரிகள் இங்கிருந்து தற்கால வாச அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொண்டும் (T. R. P.), நாடற்ற பிரஜைகளாகவும் இருந்துகொண்டு, இந் நாட்டின் செல்வச் சிறப்பினை உறிஞ்சி வருகிறார்கள் என்பது நாடறிந்த உண்மையாகும். இலங்கையிலே வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் இந்தியர்கள் பலவிதமான முறைகளைக் கண்டு பிடிக்க முடியாதவாறு, நுட்பமாகக் கையாண்டு, இலங்கையில் பணஞ் சம்பாதிக்கின்றார்கள்: அத்தகைய வியாபாரங்களில் ஒன்றுதான் 'இந்தியப் பத்திரிகை ஏஜென்சி' வியாபாரமும் நடைபெறுகிறது! நாணய மதிப்புக் குறைவைச் செய்த இந்திய நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகள், நாணய மதிப்புக் குறைவு செய்யாத எமது நாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலே, 'இரட்டிப்பு' விலைக்கு விற்கப்படும் 'இரகசியம்' இதுவே எனலாம். தேசாபிமான முள்ள யாரும் இவ்விறக்குமதி மோசடிகளை ஆதரிக்க மாட்டார்கள்.

எப்பொழுதோ எழுந்த குரல்!

ஈழத்திலே சஞ்சிகைகள் எப்பொழுதிருந்தோ வெளியிடப்பட்டன. அது நீண்ட பெரிய சரித்திரமாகும். ஆனால், என்ன சாபக்கேடோ? அவைகள் நிலை பெறவில்லை!

ஈழத்து இலக்கியச் சஞ்சிகைகள் வெற்றி யளிக்கவில்லை யென்று கைவிடப்பட்டதும் இல்லை. காலத்துக்குக் காலம் பரிசோதனைகள் நடைபெற்றுக் கொண்டுதான் வந்திருக்கின்றன. இப்பொழுதும் நடை பெறுகிறது! இவற்றின் விளைவாக, இந்நாட்டில் படிக்கப்படும் தமிழ் நாட்டுச் சஞ்சிகைகள் மீது கவனம் திரும்பியது. ஈழநாட்டுச் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு இந்தியப் பத்திரிகைகள்தான் குந்தகம்விளைவிக்கின்றன எனும் அபிப்பிராயம் நிலவத் தொடங்கிற்று. அப்பொழுதே எழுந்தது அந்தக் குரல்! எனினும், அந்த அபிப்பிராயம் முற்றிலும் உண்மையானதா? நமக்குக் கௌரவமானதா? என்பது ஆராயத்தக்கது.

ஈழத்து வாசகர்கள்

ஈழத்து இலக்கிய ஏடுகள் நிலைபெறமுடியாமற் போனதற்குக் காரணம் ஈழத்து வாசகர்களது கலாரசனையும் வாசிப்புச் சுவையுந்தான் என்று துணிந்து கூறுகின்றேன்! வாசகர்களுடைய ஆதரவில்லாமல் பத்திரிகைகள் எப்படி உயிர்வாழ முடியும்? ஈழத்து வாசகர்கள் ஈழத்து இலக்கியப் பத்திரிகைகளைப் புறக்கணித்து வந்திருக்கிறார்கள்; கணிசமான வாசகர் வட்டமில்லாத பத்திரிகைகளில் வியாபாரிகள் நியாயமாகவே விளம்பரஞ் செய்ய விரும்பமாட்டார்கள். ஈழத்துப் பத்திரிகைகளுக்கு விளம்பர வருவாய் கிடைக்கவில்லை. விற்பனை வரவு செலவுக்குக் கட்டவில்லை. இலக்கிய வாதிகளினால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகளைத் தேசீயவுணர்வு கொண்டு தானும் ஈழத்து மக்கள் ஆதரிக்கவில்லை. இந்தியப் பத்திரிகைகளையே அதிகமாக விரும்பிப் படித்தார்கள். இப்பொழுது 'இரட்டிப்பு' விலை கொடுத்தும் வாங்கிப் படிக்கிறார்கள். சிறந்த இரசிகர்களான ஈழத்து வாசகர்கள் ஈழத்து இலக்கியப் பத்திரிகைகளைப் புறக்கணித்தே வந்திருக்கிறார்கள்!

ஈழத்து எழுத்தாளர்கள்

இலக்கியம் இன்பந்தருவது; எழுத்து ஓர் அரிய கலை. இலக்கிய எழுத்துக்கலை என்பது சாதாரணமாக எல்லோருக்கும் எளிதில் கைவரக்கூடிய ஒன்று அல்ல; பிறருக்கு இன்பமூட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுகின்ற எழுத்தாளன் உள்ளத் தூய்மையுடையவனாக இருக்கவேண்டும். நல்ல இலக்கியத்தை நல்ல இதயமுள்ளவர்களால்தான் படைக்க முடிகின்றது. 'எழுதும் தகுதி' மட்டும் இருந்துவிட்டால் போதுமா? பண்பட்ட வாசகர்கள் வாங்கிப் படிக்க வேண்டாமா?

இலக்கியம் பயின்று, பண்பட்ட உள்ளம் உடையவர்கள் மட்டுமே நல்ல இலக்கிய எழுத்தாளர்களாக வாசகர்களால் படிக்கப்பட்டு, போற்றப்படுவதை நான் பார்த்திருக்கிறேன். எழுதுகின்றவர்கள் அதற்கென்று பிறக்கின்றார்கள். எழுத வந்து, எழுதுகின்றார்கள். எழுதாமல் இருக்க முடியாமல் எழுதுகின்றார்கள். அங்கே இலக்கியம் வளம்பெறுகின்றது. வாசகர்கள் பாராட்டுகின்றார்கள். ஆதரிக்கின்றார்கள்.

இங்கே, ஈழத்து எழுத்தாளர்களிடையே போட்டி, பொறுமை மிகுந்து, இலக்கிய வளர்ச்சி நலிவுறுகின்றது: இன்பமூட்ட வேண்டிய இலக்கியக் கலை இவர்களுடைய 'ஈனமான' போக்கினால் படிக்கின்ற வாசகர்களுக்கே அருவருப்பாக, துன்பந் தருவதாக அமைந்துவிடுவது ஈழத்து வாசகர்கள் கண்ட அனுபவமாகும். எழுத்தாளன் இலக்கியத்தைப் படைத்துவிட்டால் மட்டும் போதுமா? எதையும் எழுதி, வாசகர்கள்மீது திணிக்க முடியுமா? ஈழத்து வாசகர்களுடைய இரசனை உணர்ச்சியைப் புரிந்துகொள்ளாமல், எதையோ எழுதி, பக்கங்களை நிரப்பி விட்டு வாசகர்கள் வாங்கிப் படிக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பது எவ்வளவு முட்டாள் தனமானது? ஈழத்து வாசகர்கள் உள்ளூர்ப் பத்திரிகைகளைப் புறக்கணிப்பதற்கு இது ஒன்றே போதிய காரணமல்லவா? வாசகர்களைக் கவருகிற சிந்தனை ஈழத்து இலக்கியப் பத்திரிகை எழுத்தாளர்களுக்கு இல்லை! பதிலாக, பல 'புதுமைகள்' இயற்றுவார்கள். அச்சிட்ட பத்திரிகையும் புதுமையாக மறைந்துவிடும்.

கம்யூனிஷமும் தமிழ் இலக்கியமும்

தமிழ் நாட்டுப் பத்திரிகைகளெல்லாம் 'குப்பை' என்று ஒரு கூட்டத்தினரிடையே வர்ணிக்கப்படுகின்றது. இப்படி எல்லாப் பத்திரிகைகளும் 'குப்பை' யென்று பொறுப்பில்லாமல் கோஷம் போடலாமா? எல்லாப் பத்திரிகைகளும், கடைசியில் குப்பைக்குத்தான் போகிறது. என்னவோ உண்மைதான்! ஆனால், உலகத்து மனிதர்களிலே நல்லவர்களும் கெட்டவர்களும் இருப்பதுபோலவே தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளிலும் நல்லவையும் உண்டு: நஞ்சிகைகளும் உண்டு: வாசமுள்ள பூக்களோடு விஷமுள்ள பாம்புகள் இருப்பதைப்போல! அதற்காக, தமிழ்நாட்டுச் சஞ்சிகைகள் எல்லாமே 'குப்பை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யென்று கூறுவது ஈனத்தனமல்லாமல் வேறு என்ன?

அந்தத் தமிழ்நாட்டு 'குப்பை' எழுத்தாளர்களுடைய பெயர்களையும், புனை பெயர்களையும், ஏன் சில பல படைப்புக்களைக் கூட இந்த ஈழத்து எழுத்தாளர்கள் 'கொப்பி'யடித்துப் பெருமைப்படுகிறார்களென்பதை ஈழத்து வாசகர்கள் நன்கு அறிவார்கள்! தென்னிந்தியக் கம்யூனிஸ்ட் எழுத்தாளர்களுடைய படைப்புகள் ஈழத்து எழுத்தாளர்கள் பலருடைய படைப்புகளில் நிழலிடுகின்றது. இவ்விரு நாட்டு எழுத்தாளர்களுடைய படைப்புகளை ஒப்பிட்டுப் படிக்கும்போது தெட்டத் தெளிவாக இவ்வுண்மை புலப்படுகின்றது.

கம்யூனிஷத்துக்கும் தமிழிலக்கியத்துக்கும் ஒரு தொடர்புமில்லை! கம்யூனிஷம் ஓர் அரசியல் தத்துவம். இலக்கியம் அடிப்படையானதல்ல. சமயமும், கடவுள் வழிபாடும் மதிக்கப்படுகின்ற இந்நாட்டிலே குப்பை எது? குப்பையல்லாதது எது? என்று நிர்மானிப்பது இங்குள்ள ஓர் அரசியற் கட்சிசார்புள்ள ஒரு சிறு எழுத்தாளர் கூட்டத்தைச் சேர்ந்ததல்ல என்பது ஈழத்து வாசகப் பெருமக்களுக்குத் தெரியாமல் இல்லை.

ஈழத்திலே எழுதப் புகுந்தவர்களிடையே ஒரு 'போக்கு' வியாதி பரவியது! அவர்களுடைய போக்குகளிலுலேயே அரிய இலக்கிய வளர்ச்சிக்கு 'முழுக்கு' போட்டார்கள் என்பது ஈழத்து வாசகர்கள் மறக்க முடியாதது!

இலக்கியப் படைப்பாளி ஒருவன் முற்போக்காக எழுதுவதில் தவறு ஒன்றுமில்லை; படிப்பறிவு எப்பொழுதும் முன்னேறுதற்காகவே ஆக்கப்பட்டது; ஆனால், அந்த இலக்கியப் படைப்பாளி கம்யூனிஸ்ட் எழுத்தாளனாக இருக்க வேண்டிய அவசியமில்லை! கட்சிப்பிரசாரமும், கட்சி அரசியலும் கலை, இலக்கியத்தை மாசுபடுத்தவே கூடாது. யதார்த்த இலக்கியம் என்றால் கம்யூனிஸ்ட் படைப்பு அல்ல! நல்ல இலக்கிய வாசகர்களை நச்சுப்பிரசார வழிப்படுத்தும் முயற்சிகளை ஈழத்து வாசகர்கள் இனம் கண்டுதானிருக்கிறார்கள், எனவே, ஈழத்து இலக்கியப் பத்திரிகைகள் வெற்றியளிக்காமல் போனதற்கு ஈழத்து எழுத்தாளர்களுடைய குழப்பங்களும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது, உண்மை; வெறும் பொய்யல்ல!

தமிழிலக்கியச் சோலைக்கு வனப்பும் மணமும் ஊட்டுவன காப்பியங்களாம். அவை சொட்டச்சொட்டச் சுவைதரும் பெற்றியன. பழந்தமிழ் இலக்கியம் பற்றிய அறிவு இந்நாளில் அருகி வருகின்றது. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் பலருக்குப் பழந் தமிழ் இலக்கியப்பயிற்சி இல்லை. பாடசாலையில் இப்பொழுதுள்ள படிப்பில் தமிழிலக்கண, இலக்கிய அறிவு பெறக்கூடிய வாய்ப்புகள் முன்னர் இருந்ததைப் போல இல்லை! இதனால், ஈழத்து முதுபெரும் எழுத்தாளர்கள் 'தமிழ் இலக்கிய மரபிற் காலூன்றிப் புதிய இலக்கியங்கள்' ஆக்க முன்வரவேண்டும்; அப்படியான படைப்புகளை ஈழத்து வாசகர்கள் ஆவலோடு படிக்கும் சூழ்நிலை நிறையவுண்டு.

[வளரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கான நாத சரஸ்வதி'

செல்வி. ந. பிராணேஸ்வரி

பேட்டிகண்டு தருபவர்:
மணிகான்

"எழில்—வளரும் பத்திரிகை. அதன் அமைப்பு நன்று. கதை, கவிதைகள், கட்டுரைகள்—தொடர்கதை தரமாக இருக்கின்றன: முதலிலிருந்து முழுவதும் படிக்கின்றேன்: தொடர்கதை முடிவிற்கான பரிசை நான் பெற்றுலும் அதிசயமில்லை..." என்று அடக்கமாகச் சிரித்துக் கொண்டே பேட்டிக்காகப் போன என்னிடம் பேசத் தொடங்கினார்: இன்று ஈழத்தின் வடபாகத்திலே தனக்கென ஒரு பாணியை அமைத்து, பல்வாரயிம் ரசிகர்களைத் தனதாக்கிக் கொண்ட, செல்வி ந. பிராணேஸ்வரி அவர்கள்.

அவர் தொடர்ந்து; "என் தந்தையாரின் பெயரைச் சொல்வதிலும் பார்க்க, 'ஊரிக்காட்டார்' என்றால் உடனே எவரும், 'திரு. A. நடராசா' என்று என்று முடிக்குமளவிற்கு, இசைத் துறையில் ஈடுபட்டு, எத்தனையோ நூற்றுக்கணக்கான இசைக் கச்சேரிகளைச் செய்து பெரும் புகழ் பெற்றவர். அவருக்கும், அவரது துணைவியான திருமதி ந. நல்லம்மா அவர்களுக்கும் நான் ஒரே ஒரு புதல்வி..." என்று சொல்லும்போதே அவருக்கு ஒரு பெருமிதம் இருந்தாலும், 'உடன் பிறந்தார் இல்லை' என்ற குறையின் சாயல் முகத்தில் ஓடி மறைகின்றது.

"... இள வயதிலேயே என் தந்தையாரிடம் சங்கீதத்தைக் கற்றேன். இன்றும் கற்றுவருகின்றேன். சிதம்பராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே, பல பரிசில்களை இசைக்காகப் பெற்றேன். நானும், அன்பிற்குகந்த செல்வி நா. இந்திரா தேவியும் இணைந்து பாடும் போது இருகுரல்கள் ஒலிக்காது. தற்பொழுது அவர் மருத்துவக் கல்லூரி மாணவி..."

"என்னுடைய பாடும் முறையிலே ஒரு பெரும் அபிவிருத்தியை ஏற்படுத்தித் தந்தவர், முன்னாள் இராமனாதன் இசைக் கல்லூரியின் பேராசிரியர் திரு. M. A. கல்யாண கிருஷ்ண பாகவதர் அவர்கள். ஒரு சிறந்த பேராசிரியர். பாடம் சொல்லிக் கொடுப்பதிலே பெரும் சமர்த்தர். சொல்லிக் கொடுக்கும் போது கவலையீனமான தவறுகளை நாம் விட்டால், வாயிலிருந்து இசைவெள்ளம் வராது; எங்கள் கண்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்த் துளிகள் சிந்தாது — வெள்ளமாகப் பாயும். இவருடைய இந்தக் கெடுபிடிக்கு ஒரு நாள் நானும் ஆளாகி, இவரிடம் பாடம் கேட்பதையே நிறுத்தப் பார்த்தேன். அவர் கற்பித்துத் தந்த பல உருப்படிகள் என்றும் திறம் உருப்படிகளாக இருக்கும். அவர் வாயும், கையும்— ஆம் வீணை வாசிக்கும்போது— சேர்ந்தால், இசையே உருக்கொண்டது போல இருக்கும்.''

''1968ஆம் ஆண்டு தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு, சரவணை சேவா மன்றத்தினால் நடாத்தப் பெற்ற மூன்றுநாள் தமிழ் விழாவில், இரண்டாம் நாள் நிகழ்ச்சியில், அன்று தலைமை தாங்கிய உயர் திரு. கா. பொ. இரத்தினம், M. P. அவர்கள் எனக்குக் 'கான நாத சரஸ்வதி' என்ற விருது பொறித்த தங்கப் பதக்கத்தைத் தந்து கௌரவித்ததை நான் என்றும் மறக்க முடியாது. 'சங்கீத ரத்தினம்' என்ற விருது, இராமனுதன் இசைக் கல்லூரியினால் எனக்கு அளிக்கப்பட்டது.''

''தீவுப்பகுதியில் பல இசைக் கச்சேரிகள் செய்துள்ளேன். 1969ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். ஊர்காவற்றுறை சிவன் கோவிலில் நடைபெற்ற என் கச்சேரியை நன்முகரசித்து, என்னை மேலும் நன்முகப் பாடும்படி ஊக்குவித்தவர் அந்தக் கச்சேரியை ஒழுங்கு செய்த தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. வினுயகலிங்கம் அவர்கள். அவர் ஒரு சிறந்த ரசிகர்; இசைப் பிரியர். திருவிழாவை அவர் நடத்திய ஒழுங்கு பாராட்டுதற் குரியது. ஒரு இசைக் கச்சேரி தரமாக அமைவதற்கு, ரசிகர்களும் உதவவேண்டும் என்பது எவ்வளவு உண்மை! அனுபவித்து ரசிப்பவர்கள்.''

''நீங்கள்'' என்று நான் கேள்வி கேட்கத் தொடங்குவதற்கு முன்பு, என்னை இடைமறித்து, ''நீங்க இப்பொழுது என்னைத் தயவுசெய்து கேள்விகள் ஒன்றும் கேட்கவேண்டாம். நீங்க என் அப்பாவைப் பேட்டி காணும்போது, நானும் அருகிலேயே நின்றிருந்தேன். நான் எனக்குத் தெரிந்ததைச் சொல்லி முடித்தவுடன், ஏதும்— மேலும் கேட்க வேண்டுமென்று தோன்றினால் கேளுங்கள்'' என்று சொல்லிக் கொண்டே, அவர் தொடர்ந்து சொல்லியதாவது:

''என் கச்சேரிகள் சிறப்பாக அமைவதற்குக் காரணம்— என் கூடப் பிறவாத சகோதரன்— எங்கள் குடும்பத்தையே அரணுக்காத்திருக்கும் என் அண்ணன் —எனக்கு முன்னே, என் பார்வை படும் இடத்தில் இருந்து தலை அசைப்பதே! இசையை அனுபவித்து ரசிக்கும் அவர் ஒரு சிறந்த இலக்கியவாதி.''

''இருபத்தைந்துக்கு மேற்பட்ட இசைக் கச்சேரிகளைச் செய்த நான், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இரண்டு முறைகள் பாடியுள்ளேன். எனது மூன்றுவது கச்சேரி இவ்வருடம், செம்டெம்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் 20 ஆம் திகதி இடம்பெறுகின்றது: 'பி' தரத்தில் பாடி வருகின்றேன். எனது முதல் வானொலிக் கச்சேரி தரமாக அமைந்தது என்று, அங்கே கடமையாற்றிய ஒரு உயர் அதிகாரி பாராட்டினார். அப் பாராட்டு எனது இரண்டாவது கச்சேரியை இன்னும் நன்றாகச் செய்யச் செய்தது."

"நான் என் கச்சேரியைத் தொடங்கு முன்பாக என் குரு நாதனே மனதில் இருத்தி, எனக்கு இசை கற்பித்த ஆசிரியர்களே மனதினுலேயே வணங்கி, எனக்கு முன்னே இருக்கும் ரசிகர்களின் குறிப்பறிந்து பாடுவதினுல்தான் நான் இன்னும் எதுவித பரிசோதனைக்கும் ஆளாகவில்லை என்பது என் எண்ணம். பாடகர்கள் தன்னை மறந்து பாடுவதை விடுத்து, கேட்பவர்கள் தங்களை மறக்கும்படி பாடுவதுதான் நன்று."

"கலைஞர்கள் மத்தியில் ஒற்றுமை மிக அவசியம். இறுக்கமான நிலத்திலே, பயிர் வளர்ச்சி அடைய முடியாதது போல— இசை என்னும் பயிரும் வஞ்சத்தை வளர்க்கும். வழியை நாடும், குரோத மனப்பான்மையுடன் வாழ்க்கையை அமைக்கும் கலைஞர்கள் நெஞ்சிலே முளைத்தாலும் வளர மாட்டாது. தெய்வத்திற்கு மலர்களை அர்ச்சிக்கும் பக்குவத்தில், இசையும் மீட்கப்பட வேண்டும். இசைக் கலைஞன் நெஞ்சு பண்பட்ட, புண்படுத்தப்பட்ட, ஈரத்தன்மையுள்ள, செழிப்பான நிலம்போல இருக்க வேண்டும், அப்படி இருந்தால் தான் இசை வளரும்; இசையுலகில் வசை குறையும்..."

"ஒரு சில இசைக் கலைஞர்கள் சாஸ்திரீய சங்கீதத்தை, அதன் தன்மையை மாற்றி, மெல்லிசை பாடுவதைப் போல, 'இனிமை' ஒன்றையே கருதி, பாட முயற்சிக்கின்றார்கள்; இனிமையாகப் பாடவேண்டும் என்ற எண்ணத்திலே, உந்தியில் இருந்து எழவேண்டிய நாதம் இவர்களுக்குத் தொண்டையிலிருந்து புறப்பட்டு, மூக்கைச் சுழித்து, முனகுகின்றனர். அதனுல் இசையின் ஜீவனே கெடுகின்றது. அது மாத்திரமா— தமிழர்களாகிய இவர்கள் தமிழ்ப் பாடல்களில் வரும் 'ரு' என்னும் எழுத்துக்கும், 'று' என்னும் எழுத்துக்கும் வித்தியாசம் தெரியாது —தமிழை, இசையைக் கருவறுக்கின்றனர்."

"ஆடிசன் பரீட்சையை நடாத்துபவர்கள்— குறிப்பாக வாய்ப்பாட்டு விடயத்தில், வாய்ப்பாட்டில் வல்லமையுள்ளவர்கள்தான் பரீட்சை செய்தல் விரும்பத்தக்கது. பட்டம் பெற்றவர்களாக மாத்திரம் இருந்தால் போதாது. பாடி வருபவர்களாக இருத்தல் அவசியம். அவர்களுக்குத்தான் ஒரு பாடகரின் தன்மை புரியும்."

"அதை விடுங்கள்.. 'பி' தரத்தில் பாடும் சிலர், தாங்கள் 'ஏ' தரத்திற்கல்ல— விசேஷ தரத்திற்குத் தகுதியானவர்கள் என்று எண்ணுகின்றனர். இது பற்றி ஒரு முதுபெரும் வித்துவான் சொல்லியதாவது: ...'இவர்கள் இப்பொழுதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் இருந்து இறக்கு மதியாக்கப்பட்ட சில சங்கீத பூஷணங்கள். அங்கே பாட மாக்கி வந்த உருப்படிகளை அப் படியே இங்கு வெளுத்து வாங்கு கிறார்கள். இப்படி இவர்களினால் அதே உருப்படிகளை எத்தனை கச் சேரிகளில், எத்தனை முறைகள் பாடலாம். இசைக்கு நல்ல கற் பனை வேண்டும். கேட்க இனிய தாக இருக்கிறது என்பதற்காக விசேஷ தரத்திற்கு ஏற்றலாம் என்றால், தெருவிலே இசை தெரி யாத சிலர் இனிமையாகப் பாடு கின்றார்கள். அவர்களைக் கூட, போடலாந் தானே!' என்றார். 'இது சரி' என்று சொல்லவும், தோன்றுகின்றது. எவ்வளவிற் குச் சரி என்று சொல்ல எனக்குத் தெரியாது. இசைக்கு முக்கிய மான சுருதி, தாளம், ராகத்தி லிருந்து பிறழாமை, அபஸ்வரம் பேசாமை, பாவம் முக்கியம். ஒன்று கூடிக் குறைந்ததோ, இசை போச்சு...''

''இசைப் பரீட்சை செய்பவர் கள் 'தியறி'யில் (theory) மாத் திரம் சிறந்தவர்களாக இருந் தால் போதாது. ரைப்ரைட்ட ரில் 'ஏ' அடித்தால் 'ஏ' விழு வதுபோல, தொண்டை எந்த நேரமும் அப்படிப் பேசாது. நடை முறையில் இசையில் ஈடுபட்டிருப்பவர்கள் இசைப் பரீட்சை செய்வது நன்று; அவர் களுக்கு நிலைமை புரியும்.''

''கடந்த சில வாரங்களாகத் 'தினகரன்' தினசரியிலும், வார மஞ்சரியிலும் 'இசைத்துறை' பற்றிப் பல ஆசிரியக் கடிதங்கள், கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சிந்தித்துச் செயலாற்ற வேண் டிய பல விஷயங்கள் அவைகளில் இருக்கின்றன. தினகரனும், எழிலும் கலைஞர்களுக்குக் காட் டும் ஆதரவைக் காணும்போது இசைத்துறைக்கு நல்ல எதிர் காலம் இருப்பதுபோல் தெரி கின்றது.''

''நான் அதிகம் கதைத்து விட்டேன் போலும். இனிமேல், சொல்ல என்னிடம் ஒன்று மில்லை. ஆனபடியால் கேள்வி களுக்கும் இடம் இல்லை'' என்று சொல்லியவாறு எழுந்து கை கூப்பி வணங்கி, பேட்டியை முடித்தார்.

அழகாகச் சீவப்பட்ட செவ் விளநீர் எனக்கு முன்னே; எழு திய கடதாசிகளை அப்படியே வைத்துவிட்டு, ''கொஞ்சம் சீனி யும், தேசிக்காயும் என்றேன்— மறுபக்கம் பார்த்துக்கொண்டே,

தேசிக்காய்— சீனி கலந்த அந்த செவ்விளநீரைப் பார்க்கும் போது, நாவில் சுவை தட்டியது; அதையும் மீறி— அவர் வாய்க் குள் முணுமுணுத்த ''தங்கரதம் ஓதவோ செய்தது.

என் வேண்டுகோலுக் கிணங்க — சில துக்கடாக்கள் பாடப் பட்டன.

இளநீரில் ஆசை மறந்து, இசை யில் ஆர்வம் மிகுந்தது. அதன் முடிவு— இளநீர் தவறுதலாகத் தட்டுப்பட்டு, சரிந்து நிலத்தில் ஓடியது.

நாங்கள் சிரித்தோம்.

இளநீர் உட்சென்றால் 'குடல்' தான் குளிரும். அவர் அளித்த இசை குடலை மாத்திரமா— உடலை யும், உள்ளத்தையும் குளிர்வித் தது. இசையிலே மயங்கி, இறை வனே மனிதனைப் பூமிக்கு வந்த தான் என்றால் நான் எம்மாத் திரம்?

விடை பெறுகின்றேன். கண் களின் பார்வையிலிருந்து மறை கின்றார். ஆனால் அவர் இசைத்த இசை, இன்னும் என் காதில் ரீங்காரித்துக் கொண்டிருக் கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிக்க வேண்டுகிறேன்

செந்தாரகை....

அத்தியாயம் 4.

அந்தக் கந்தோரில் ஒரே சல சலப்பு.

சீவ் கிளாக்கர் சதாசிவம் கந்தோர் கடிதங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தார். அவருக்கு முன்னே உடைத்து விரிக்கப்பட்டு வைத்திருந்த கடிதங்கள்! உதவி வேண்டி நின்ற கடிதங்கள்! கொடுக்கும் உதவிக்கு, உபத்திரவமாக உருக்கொண்டு நிற்கும் கடிதங்கள்! மற்றவர்களும் எழுதுகின்றார்களே என்ற ஆத்திரத்தில், எழுதப்பட்ட 'ஏனோ, தானோ?' என்ற கடிதங்கள்.

இடப்பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த கடிதங்களை ஒவ்வொன்றாக எடுத்து, திகதி முத்திரை குத்தி, குறியீடுகள் இட்டு, வலப்பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்தார் சதாசிவம் கிளாக்கர்.

கந்தோருக்கு வந்தால் அவருக்கு வீட்டு நினைவுவராது. ஏழு பெண் குழந்தைகளுக்கு தந்தை என்று சொல்லும்படி, கந்தோரில் கவலைப்பட்டுக்கொண்டிருக்க மாட்டார். 'இன்று ஏன் அரைப்போத்தல் பால் குறையக் கறந்தது?' என்று கந்தோரில் வந்து சிந்திக்கமாட்டார்.

கந்தோருக்கு வந்தால் அவருக்குக் கந்தோர் எண்ணம்தான். பாவம், நல்ல மனுஷன்! கந்தோர்தான் அவர் வீடு என்று சொல்லலாம். கந்தோருக்கு வாறது என்றால், அவருக்கு ஒரே மகிழ்ச்சி. 'கந்தோரில் தான் இப்படிக் கொஞ்சம் என்றாலும் சிரிச்சுக் கொண்டிருக்கிறார்' என்று கந்தோருக்கு வரும் அவர் ஊர்வாசிகள் சொல்வது அவருக்கு எட்டியிருப்பதாகத் தெரியவில்லை.

இடப்பக்கத்திலிருந்து கடிதங்களை எடுத்த இடக் கைக்கு ஓய்வு.. இன்னும் கடிதங்கள் இருக்கின்றன. இருந்தும், இடக்கை எடுத்த ஒரு கடிதத்தில், வலக் கையினால், திகதி முத்திரையைக் குத்திவிட்டு, இரண்டு கைகளினாலும் அந்தக் கடிதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுறைகள் பார்ப்பதும், யோசிப்பதும், பார்த்துக்கொண்டே யோசிப்பதுமாக இருந்தார்:

அது—

ஒரு கடதாசியின் நான்கில் ஒருபங்கு.

அந்தக் கடிதத்தைத் துருவித் துருவி ஆராய்வதுபோல, கண்களை அகல விழித்து, அதையே பார்த்துக்கொண்டிருந்தார்.

'சரி, இனிமேல் கந்தோரிலை சிரிப்புக்கும், முஸ்பாத்திக்கும் குறைவிராது' என்று எண்ணித் தனக்குள்ளே சிரித்தார்போலும்.

"என்ன சிந்தனை கலந்த சிரிப்பு?" ஏதோ ஒரு பெரிய தமாசைச் சொன்னதுபோல, பெருமிதத்துடன் நான்கு பக்கமும் பார்த்துவிட்டு, சீவ் கிளாக்கர் சதாசிவத்தையே பார்த்தார் அவருடன் கூட வேலைசெய்யும் இன்னொருத்தர்.

"அப்படி ஒன்றுமில்லை..."

"அப்படி எண்டால்? ..."

"... அதுதான் என்னை சிநேகிதன் அடுத்த கிழமை கச்சேரியிலிருந்து இஞ்சே மாறி வாறனும். இனி எனக்கு ஒப்பாரிதான்" என்று சொல்லிவிட்டு மீண்டும் அந்தக் கடிதத்தையே பார்த்தார்.

"எனக்கு ஒண்டும் புரியவில்லையே?"

"அப்பிடி பெரிசா ஒண்டுமில்லை. அவன் ஒரு சரியான முசுப்பாத்திக்காரன். நினைப்பதை 'பட்' என்று சொல்லிப் போடுவான். அவனுக்கு அழத் தெரியாது..."

"அழத் தெரியாதா? ...

"எனக்கு நல்ல ஞாபகமாகக் கிடக்குது அவன் சொன்னது: அழுதுகொண்டு பிறந்த நாம், அழுவதில் அர்த்தமில்லை; அதிசயமுமில்லை. அப்படி அழுதுகொண்டு பிறந்த நாம் அழாது சிரிச்சுக்கொண்டு சாகுமட்டும் வாழவேணும்' எண்டான். சதா சிரிச்சுக்கொண்டே இருப்பான்: அழுகிறவையையும் சிரிக்க வைப்பான்.."

"நீங்க சொல்லுறதைப் பார்த்தால் .. பெரிய—"

"என்ன பெரிய?... ஆளும் பெரியவன்தான்; அதை இதை எல்லாம் எழுதுறவன். கந்தோரிலை இனிக் கடதாசிப் பஞ்சம் அடிக்கடி ஏற்படும் .. ஆனால்..."

"ஆனால், என்ன?"

"ஆனால் என்னவோ?... உனக்கு என்ன தெரியும்? என்ரை முதுகைக் கேள்! அது கதை சொல்லும். முதுகுக்கு மாட்டுத் தோல்தான் போட வேணும்: அப்பதான் அவன் தாளம்போடச் சரியாக இருக்கும்..." என்று சொல்லிவிட்டு, சிந்தனை வசப்பட்ட மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, 'கண்ணன் மாற்றலாகி வருகின்றான்' என்ற செய்தி தரும் கடிதத்தை வலப்பக்கத்தில் வைத்துவிட்டு,

கடிதங்கள் இடம் மாறின. மாறிக்கொண்டே இருந்தன: கடமையில் அவர் மூழ்கிவிட்டார். ஆனால் அவருக்குப் பக்கத்தில் இருந்து வேலை செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த 'பெண்—கிளாக்' அவர்கள் பேசிய விஷயத்தை அசை மீட்டுக் கொண்டிருந்தாள்:

'யார் இந்தக் கண்ணன்? சே! இவருக்கு இவ்வளவு அன்பும், ஆதரவும் இருக்கே. சீவ் கிளாக்கர் சொல்லுறதைப் பார்த்தால் சீவ் கிளாக்கரையே தண்ணிக்கு விடுவார்போலே கிடக்கு. ஒரு வேளை நான் வாற தெருவிலே நிக்கிற மீசைக்காறன்கள் போலேயோ?'' என்று அதைப் பற்றியே, தன் மனம் போனபோக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் மனம் வேலையில் புலன் செல்லவில்லை.

அவள் சிந்திக்கவேண்டிய விஷயம்தானே! அவள் ஒரு சின்னப் பெண். இருபது வயதிருக்கும். எந்த ஆண்பிள்ளையையும் ஒருக்கால் என்றாலும் திரும்பிப் பார்க்கச் செய்யும் அழகு. சீவ் கிளாக்கரின் முதுகே மேளமாக மாறும் என்றால் ...

என்றும் இல்லாது இன்றுதான் அவள் தன் தனிமையை உணருகின்றாள். இதுவரை அவளுக்கு எந்தவித பிரச்சினையும் இருக்கவில்லை, கந்தோரைப் பொறுத்த வரையில் கந்தோருக்கு வருவாள்; போவாள். தெருவிலே நிற்கிற சில மீசைக்காறக் காவாலியள் சிரிச்சு, கதைச்சால் அவளுக்கு என்ன? அவள்தான் அவர்களைப் பார்க்கிறதில்லையே! அவர்களின் பார்வை பட்டு, அவளை மறைத்து வைத்திருக்கும் அந்தக் குடை ...

கடும் வெயிலிலும் அவள் மேனியைப் பாதுகாத்து பரவசப்படும் அந்தக் குடை அந்தப் பாவியளின் பார்வையில் தானே பொசுங்குவது போன்ற பிரமை:

'கந்தோருக்குள்ளும் அப்பிடி ஒரு மீசைக்காரன் போலே ஒரு கிளாக் வந்தால்...' என்று அவள் எண்ணி அதிர்ச்சி அடைவது நியாயம்தானே!

அவள் சிந்தனை வசப்பட்டிருக்க, சீவ் கிளாக் கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருக்க, கந்தோரில் இருந்த மற்றவர்கள் 'தேநீர்' குடிக்கப் போக—

தோளிலே ஒரு கோட்டை போட்டு, தொங்கவிட்டவாறு ஸ்டைலாக ஒரு கையால் கோட்டின் கொலரைப் பிடித்துக் கொண்டு — நடையுடன், சதா சிந்தும்புன்னகையுடன், கவர்ச்சி நிறைந்த பார்வையுடன், சீவ் கிளாக்கரின் மேசையை நோக்கி வந்துகொண்டிருந்தவன்;

''ஹலோ...!'' என்றான்.

என்ன சத்தம்! ஆணின் குரல்தான். அதில் தொன்றும் வீரியமும், நளினமும் ..

அந்தப் பெண்—கிளாக் தலை நிமிர்ந்தாள்; தலை குனியத்தான் பார்த்தாள், முடியவில்லை. அவளுக்கு ஒரு புன்னகையை விடையாகக் கொடுத்துவிட்டு, தன்னையே ஏறிட்டு, திகைப்புடன் பார்த்துக்கொண்டிருக்கும் சீவ் கிளாக் சதாசிவத்தைப் பார்த்தவன்—அவரின் முதுகிலே ஒரு ஒற்றையடித் தாளம் வாசித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பத்திரிகைகளை ஆதரியுங்கள்!

ஈழத்து இலக்கியம் வளர —
இயன்றவரை உதவிபுரியுங்கள்!

— செ.தி.ச.

ஈழத்து இலக்கிய இரசிகர்களுக்கு
இனியதோர் செய்தி!

விரைவில் வெளிவருகிறது!
இன்னுமோர் ஈழத்திலக்கிய ஏடு!

எழுத்தாளன்

ஆசிரியை: கோதைநாயகி சம்பந்தன்

• • •

"உற்றெழுந்த சிந்தனையின் ஒளியால் இந்த
உலகோம்பும் எழுத்தாளன் உறங்கு வாழ்வே?"

— க. வேந்தனார்.

விடயங்கள், விளம்பரங்கள்
தந்துதவ விரும்பும் அன்பர்கள்
விபரங்களுக்குத் தயவுசெய்து எழுதுங்கள்.

முகவரி: திருமதி கோதைநாயகி சம்பந்தன்,
'எழுத்தாளன்' அலுவலகம்,
321, வனவாசல,
களனி
(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சதாசிவம் கிளாக்கர் பேச வில்லை; பேசுவதற்கு அவர் திகைப்பிலிருந்து மீளவேணுமே!

"ஏண்டாப்பா பேசமாட்டி யாம்?" என்று கேட்டவன், அந்தப் பெண்ணை சாடையாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, "ஓ! இந்தப் பெண் இருப்பதினாலா? வயதோடு சேர்ந்து வளருவது ஆசை ஒண்டுதான் ம்! நான் உனக்கு போட்டிக்கு வரவில்லை" என்று சொல்லியவன் மீண்டும் ஒரு சின்ன ஒற்றையடித் தாளம் வாசித்தான்:

"நான் சொல்லியது—சரியா?" என்று கேட்பதுபோல, தான் அருகே இருந்த அந்தப் பெண்—கிளாக்கைப் பார்த்தார் — சீவ் கிளாக்கர் சதாசிவம்.

அவள் .....

அவனையே பார்த்துக்கொண் டிருந்தாள்; சீவ் கிளாக்கர் தன் னைப் பார்ப்பதனை உணர்ந்து, தன் தலையைக் குனிந்தாள். தலை குனிய — மனம் நிமிர்ந்தது.

மனம் நிமிர்ந்தவுடன், குனிந்த தலை மீண்டும் நிமிர்ந்தது.

"ஐயோ! ... அப்படி ஏன் என்னை விழுங்கிக் கொண்டிருக் கிறாய்? என் கண்களை மாத்திரம் பார்க்காதே! பார்த்தவர்கள், என்னைப் பார்ப்பதை மறந்து, கண்களையே பார்க்கின்றார்கள்" என்று சொல்லியவாறு தன் கண்களைக் கறுத்தக் கண்ணாடியி னால் மறைத்தான்.

கண்கள் இருட்டடிக்கப்பட் டன. அந்தக் கண்கள், பார்த்த மறு கணமே, அவள் உள்ளத் திலே பதிந்துவிட்டன. கண் களா, அவை?

அந்தக் கண்களைக் காணுத கண் கள் கண்களல்ல; அழகாகப் பேசும். மயக்கிச் சிரிக்கும். பார்த் தவர்களைக் கவ்வும். பார்க்க, பார்க்கச் சொல்லும்: இருந்தும் அவளால் அந்தக் கண்களை ஒரு வினாடிக்குமேல் தொடர்ந்து பார்க்க முடியவில்லை:

"என்னை யாரென்று பார்க் கின்றாயா? உனக்கு எங்கே தெரியப்போகுது! I am sorry. நான்தான் கண்ணன். இங்கே மாறி வரப்போகிறவன்...அப்ப, தாங்கள் யாரோ?..." என்ற கேள்வியில் ஒரு தளுக்கு வைத்து கேட்டான்.

அவள் உடல் விறைத்திருந் தது; உள்ளம் துளிர்த்திருந்தது. எது உண்மை?

'உனக்கு' என்று எடுத்த எடுப்பிலேயே உரிமை எடுத்துப் பேசியதா?... இல்லை, 'தாங் கள்' என்று தளுக்குடன் பின்பு பேசியதா?... 'உனக்கு' என்று அவன் சொல்லும்போது, அவள் மனம் 'எனக்கு' என்று எண்ணி யிருக்குமோ?

"எந்தக் கண்ணன் இந்தக் கந்தோருக்கு மாறி வரப்போகின் றான்" என்று சில நிமிடங்க ளுக்கு முன்பு பேசிக்கொண்டி ருந்தார்களே, சாட்சாத் அந்தக் கண்ணன்தான் அவர்களுக்கு முன்பு வந்து, பேசிக்கொண்டு நிற்கின்றான் என்றால்...

பக்கத்தில் இருந்த கதிரையை அவர்கள் இருவருக்கும் நடுவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்துப்போட்டவன் "என்ன சதா" நான் இவ்வளவு பேசியும், நீங்க ரெண்டத்தால் ஒருத்தர் கூட ... ம்! ... பேசயில்லையே! இந்தப் பிள்ளைக்குத்தான் நான் புதிசு. உனக்குமா? ... எனக்கு எப்பவும் Sey Introduction தான் விருப்பம்" என்ருன் இருந்து கொண்டே.

"கண்ணு! நீ என்ன கேக்கின்ருய் என்று புரியுது. 'நினைத்தேன் வந்தாய்' என்றது போலே இருக்கு. அதுதான் ஒரு மாதிரியா விட்டேன். இதுதான் 'ராதா' என்ற பெண். பார்க்க அப்பிடித்தான். வாய் வைச்சாய் ..." என்று சதாசிவம் சொல்லி முடிக்குமுன்னே, கண்ணன் இடை மறித்து, "...கடிக்குமா? ..." என்ருன்.

"கடித்தால் கடி படாதோ?" என்ற அவள் இனிய குரலில் மனம் இரங்கினுளு? ... இல்லே. சொல்லிவிட்டு, அவள் சிந்தித்த சிரிப்பில் மனத்தைப் பறிகொடுத்தானே?

"ச்சே! இப்படியும் ஒரு சிரிப்பா? நினைச்சாலே மனம் சிலிர்க்குது. இன்னுமொருக்கால் சிரிச்சால்" என்று அவன் மனம் எண்ணித் தவித்திருக்குமோ?

"கண்டியா, நான் சொன்னேன்!" என்ருர் சீவ் கிளாக்கர்.

"சதா! நான் அப்பிடி நினைக்கவில்லே. கடிக்கிறது நாய் என்டும் சொல்ல வரயில்லே..." என்று சொல்லிவிட்டு, ராதாவைப் பார்த்து, அவள் முன்னே தலையை நீட்டி, தன் இடக் கன்னத்தைச் சரித்துக்கொடுத்து", இதிலும் கடிக்குமா? என்ருன்.

சீவ் கிளாக்கர் பேய் அறைந்த வனுனர்.

அவள் ..

அவள் மேனியிலே ஒரு நடுக்கம். இதயத்திலே உணர்வின் தாக்கம். தன்னில் ஒரு புதுவித மான உணர்வு ஒவ்வோர் மயிர்க்கால்களிலும் ஏற்படத் தொடங்கியதை அவள் உணர்ந்தாள்

அவள் உள்ளம் அவன் கேட்டதைக் கொடுக்க விரும்பியது. உடல் அவளுடன் ஒத்துழைக்க மறுத்தது. அவளுள் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. இருபதுவருட காலம் வாழ்ந்த வாழ்வில், 'இந்தக் கணம்தான்' வாழ்வின் தொடக்கத்தையே தொட்டது போலிருந்தது.

அவள் இதழ்கள் துடித்தன. நெஞ்சு விம்மியது. தான் பலமுள்ளவள் என்று எண்ணியவள், இன்று தான் பலவீனமானவள் என்பதை உணர்ந்தாள். தன் பலவீனத்தை மறைக்க அவள் முயற்சி செய்யச் செய்ய அவள் மேலும் பலவீனப்பட்டுக் கொண்டே இருந்தாள்.

அவள் கண்கள் கலங்கின.

சீவ் கிளாக்கரின் இதயமே கலங்கியது.

"Don't worry. சும்மா தமாஷாகக் கேட்டேன். Don't misunderstand me. என்னைப் புரிந்தால்..." என்று சொல்லிவிட்டு, சதாவைப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதா பேசவில்லை.

"கேட்பது இலகு; கொடுக்க நினைப்பதுவும் இலகு; கொடுப்பதுதான் சிரமம். அப்பிடித்தானே? Be a Give to take things easy,"—என்று தொடர்ந்து சொல்லி முடித்தான் கண்ணன்.

"இல்லை. நான் தவறுக எண்ணவில்லை. கண்ணிற்குள் ஏதோ விழுந்துவிட்டது ....." என்று சொல்லி, தன் கண்களைக் கசக்கினாள். தன் மனநிலையைப் புரிந்துவிட்டாரே என்ற மகிழ்ச்சி, அவள் மனதில் ஒருபுறம்.

"கண்ணைக் கையால் கசக்கினால், கண் இன்னும் கலங்கும் ..." என்று சொல்லி, அவள் மேசையில் இருந்த லேஞ்சியை, எட்டி எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அவன் எட்டி எடுக்கும்போது அவள் அசையவில்லை. எடுக்கும்போது அவன் உடல் தன் உடல்மீது பட்டால் படட்டும் என்று இருந்தாளோ?

'தாங்க்ஸ்!" என்று அவள் வாய் சொல்லவில்லை. கண்கள் சொல்லின.

லேஞ்சியைக் கொடுக்கும் போது, அவள் விரல்கள், அவன் விரல்களைத் தீண்டினவா? இல்லை, அவன் விரல்கள், அவள் விரல்களைத் தீண்டினவா? ... விரல்கள்—விரல்களைத் தீண்டின. மனதிலே விரகதாபம். இன்பச் சுமையில் நசுங்கும் ஒருவித துடிப்பு.

சிவ் கிளாக்கர் சதாசிவம் கடிதங்களைப் பார்த்தபடியே, கண்ணனுடன் கதைத்தார். கண்ணன் ராதாவைப் பார்த்தபடியே சதாவுடன் கதைத்தான். ராதா யாரையும் பாராமலேயே கண்ணனின் இதயத்துடன் கலந்தாள்.

கண்ணனும் ராதாவும் சிரித்தனர். சீவ் கிளாக்கர் சதா விழித்தார்.

விழித்த சதாவைப் பார்த்து, காதைக் கொடுத்துக் கேட்கும்படி கண்ணன் சொல்ல — சதா கேட்க காதில்புகும் இசை அவருக்குப் பழக்கமான — விருப்பமான ஏதோ ஒன்றுகப் புரிந்தும் புரியாததுமாக இருந்தது.

பாட்டின் பல்லவி மீண்டும் பாடப்பட்டது.

"கொத்துங் கிளிநானிருக்க— கோவைப் பழம் நீயிருக்க ..." —பாட்டுத் தொடர்ந்தது.

சதாவும சேர்ந்து சிரித்தார்.

அவள் ஏன் சிரித்தாள்?

அவள் கன்னம் ஏன் கோவைப் பழம்போல சிவக்க வேண்டும்? எந்தக் கொத்துங் கிளி கொத்தியது?

எவ்வளவு நேரம் தொடர்ந்தது பேச்சு! அவனுக்கு நேரம் போனது தெரியவில்லை. ஒன்றும் புரியவில்லை. ஏதோ ஒன்று புரிந்தும் புரியாததுமாய் இருந்தது!

"மிஸ். ராதா! அடுத்த கிழமை நான் வரும்போது 'உம்!' என்று இருக்கக்கூடாது; என்னைப்போலச் சிரி! ஆனால், உன் சிரிப்புப் பொல்லாதது..." என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிய கண்ணனுக்கு—'உங்க பார்வை மாத்திரம் நல்லதோ' என்று சொல்ல எண்ணியவள் அதைச் சொல்லாது, "பொல் லாததா? அப்படி எண்டால் நான் சிரித்துக்கொண்டே இருப் பேன்" என்றாள்.

அவன் சிரித்துக் கொண்டே போனான். ஆனால், கண்ணனின் உருவம் அவள் இதயத்திலே பதிந்துவிட்டது. அவள் மனம் நிறைந்து காணப்பட்டது.

"இதுவரையும் என் மனம் வெறுமையாகவா இருந்தது? ஆமாம்! இன்றுதான் எனக்குப் புரிகின்றது..." என்று அவள் தன்னைப் புரியத் தொடங்கி னாள்.

நினைவு கலைந்தது.

(தொடரும்)

உலகம் உய்வதற்காகச்

சிவமும் சக்தியுமாக விளங்கும்

ஜா எல,

சிவசக்தி மில்ஸ்

நீடு நிறை பெற்று நீடுழி வாழ

எங்கள் வாழ்த்துக்கள்.

தொலைபேசி:
76 — 394

தந்தி:
'சிவசக்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைமாலை 2.

ஊரிக்காடு திரு. A. நடராசா

இராகம் சத்த ஸாவேரி ஆதி

ஸ்ரிமபதஸ்
ஸ்தபமரிஸ } 28 வது

பல்லவி

காவாத காரணம் ஏனே—கபாலி (காவா)

அனுபல்லவி

மூவா முதலே முருக வேள் தாதையே
முப்புர மெரி செய்த முக்கண்ணரே (காவா)

சரணம்

1. கல்லேனும் ஒரு காலத்திலே உருகும்
கல் நெஞ்சம் உருக கருணை மழை பொழிவாய்
பல்லுயிர்க் காதரா பரம க்ருபகரா
பாலன் யோக தாஸன் பாடற் கிரங்க—இன்னும் (காவா)

2. ஓமெனும் பிரணவ உட்பொருளிலுறையும்
நாமரூபம் கடந்த நமச்சி வாயப் பொருளே
பாமாலை பாடும் பரமனடியார்க்கு
பரிந்து அருள் புரியும் பரசு பாணியரே (காவா)

* * *

ஸ்வர சாஹித்யம்

பல்லவி

1. ஸ்தா; பா - மபதப – பமரிஸ | தா, ஸ்ர்,, | பமரிஸ - ரிமபத
காவா த கா- - - ர-ணம் ஏ னே கா - - பாலி -

2. ஸ்ஸ்த–தபபம-மரிரிஸ-ஸரிஸத | ஸா, ஸ்ர்;, | பமரிஸ-ரிமபத
காவா - -த - கா - - ர-ணம ஏ னே கா - - பாலி -

3. ஸ்ரா ஸரரிஸ் தா - தாஸ்த பா மாபம ரீஸா: | தா, ஸா:, | பமரிஸ - ரிமபத
கா வா - - - த - - - கா - - ரணம் ஏ னே கா - - பா-லி-

4. ஸ்ரிம்ரி-தஸ்ரிஸ்-பதஸ் மபமரிஸ | தா, ஸ்ரா, | பமரிஸ – ரிமபத
கா - - வா- - - த - - கா:ர-ணம் ஏ னே கா - - - பா-லி -
ஸ்தா-; பா - மபதப - பமரிஸ | தா, - ஸ்ரா,
காவா த கா- - - ர-ணம் ஏ னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

1. தா, பா, மா – பாதா -ா; | : பதா - ஸ்தா | ஸ்ா; – த ப தா
மூ வா மு தலே - - முரு - கவேள் தா - தை - யே

2. பதஸ்த - ததபம - பாதா–ா; | ; பதா - ஸ்தா | தஸ்ரிஸ்-த ப தா
மூ-வா- - - மு- தலே முரு கவேள் தா - - - தை-யே
ஸ்ரிமா - ; ரீ - ஸ்ாதா – தபதா | பதஸ்ா – ; ஸ்ா | ஸ்தபம-ரிமபத
மு - பு ர மெரி செய்த மு-க்க - ண்ண ரே - - - - - -

சிட்டைஸ்வரம்

ஸ்தா - தபமபத - மதப - மபமரிரி | ஸா: - ரிம | பததப - பமபத
ஸ்ரிஸ் - தாஸ்தப - பதஸ் – பாமபத | ரிமப - பாமரிஸ | தஸரிம-பா?
தஸ்ரி – தஸ்ரீரீ - பதஸ் - பதஸ்ாஸ் | மபத - மபதாத | பமரிம - பா ;
தஸ்ரி – தஸ் ஸ்ரிஸ்ரிஸ் – ததஸ் - ததஸ்தப | த்ரிரி - தஸ்ஸ்ப | தத – மமப-ரிமபத

சரணம்

; தா - தாதா - தாதா - தாதா | ; பதா - ஸ்தா | பா ! - பமதா
கல் லே - னும் ஒரு கா - லத்தி லே உருகும்

: தா - தாதா - தஸ்ரிஸ் - தபதா | : பதா - ன்தா | பா ; - பமதா
கல் லே – னும் - - ஒ - ரு கா - லத்தி லே உருகும்

; மா - , பபா – மபமரி - ரீஸா | ; ஸரீ - மமா | பாபா – பாபா
கல் - நெஞ் சம் - உ ருக கரு - ணை மழைபொ ழிவாய்

அ. ப.

; தா - தாதா - பதஸ்த - தபமா | ; பதா - ஸ்தா | ஸ்ா ; - ஸ்ாஸ்ா
பல் லுயிர்க் கா - - - தா - ரா பர - மகிரு மா - க ர

; ஸ்ரீ - , ம்ரீ - ரின்ஸ்ா - தபதா | ; பதா - ஸ்தா | தபபம – பாதா
பா- ஸன்யோ-க-தா - சன் - - பா - டம்கி ரங் - க இன்னும்

(சிட்டைஸ்வரம் பாடி முடிக்கவும்)

Reliable Place for Excellent Jewels by
Master Craftsman under Personal Supervision

THILAKA JEWELLERS

469, 2nd Division, — Maradana.

Telephone : 96998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க(வி)தையாளர்!

'மணி-தாசன்'

1. உன்னை வைத்தொரு கவிதை எழுதலாம்
என்னை வைத்துநீ என்ன எழுதலாம்?
உன்னை வைத்துயர் ஓவியந் தீட்டலாம்;
என்னு ணர்வினுல் என்ன இயற்றலாம்;
அன்னை யாகிநீ அகிலம் அமைக்கலாம்;
அமைதி யாக யான்என்ன சமைக்கலாம்?
உன்னை வைத்தொரு க(வி)தை எழுதலாம்
என்னை வைத்து இனி—எழுதலாம்!

2. கள்ளி னுற்புதுக் காட்சி நுகரவும்
கனவி லேயுனைக் காணல் அகலவும்,
உள்ளி னுலதை யுதைக்க முடியலை;
உவந்து வந்ததை உணர்வு சுழிக்குதே!
தள்ளி னுலிதைத் தரணி யிலேயிவன்
தனித்து வத்தின் கொடியை உயர்த்தலாம்,
எள்ளி னுய்இதை; ஏங்கும் நிலைமையை
எப்ப டிஇனிக் கண்டு சுவைக்கலாம்?

3. 'அற்புதம்' என்னும் வாஞ்ஞையை ஊற்றினுய்;
அந்த ஆழ்விலே போதையை ஏற்றினுய்;
கற்ப னைக்குட்பொற் கோயிலைக் காட்டினுய்,
கடவுள் ஓடவோர் காவியந் தீட்டினுய்!
விற்கவா அன்பை? வேண்டிட யாருளர்?....
விடிவி லாதவோர் பாதையிற் போகிறேன்.
நிற்கலா மென நெஞ்ச மலைக்கினும்.
நீண்ட தோர்பெரு மூச்சுடன் போகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும்
ஒரே ஸ்தாபனம்

கமலா கராஜ் அன் இன்டஸ்ரீஸ்

நவீன யன்னல், கிறில்-கருக்குக்கேற்றுக்களும்
மோட்டார் வாகனங்களின்
உதிரிப் பாகங்களும்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
செய்து கொடுக்கப்படும்.
இன்றே விஜயம்செய்யுங்கள் :

கமலா கராஜ் அன் இன்டஸ்ரீஸ்
53, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

▲ மோட்டார் சைக்கிள்

▲ நீர் இறைக்கும் இயந்திரம்

முதலியவற்றின்
உதிரிப் பாகங்களுக்கு

யாழ். ஓட்டோ கவுஸ்

10, ஜூபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 'செப்டெம்பர் அஃ தறுபத் தியொன்பதும்'
சென்ற 'நாலுநான் காகி' அலையட்டும்
அப்பப்பா அஃத கத்தை மறைத்ததே!
அந்த ஆசையே நானே நிறைத்தது.
எப்பெப்போ இதையான் மறைப் பேனென
இடிவி ழுந்தென தெண்ணஞ் சிதைகுதே,
'தப்பப்பா' எனநீ சொல்லி ஏகினும்
தளிர்த்த ஆசைகள் தரையில் உலர்குதே!

5. 'ராதா கண்ணன்' சிலைகளும், ஓவிய
ரம்மி யங்களும், உணர்வெனும் போதையில்
மோதி மோதி முழுவுரு வாகிருய்;
முள்ளி லேமலர் நீநின்றெங் கேகிருய்?
போதையா இது; புத்தகப் பாடமா?
போன பாதை திரும்ப முடியுமோ?
காதை போலிதைக் கூறிடக் கன்னியே,
காலமோ எனைக் கைவிட்டிங் கேகுதே!

6. வேத னைக்குள் அமிழ்த்தும் வினைவிலே
விருட்ச மாகி விழுதுகள் பாய்ச்சிஓர்
மோதி ரத்தினுல் முகிழ்த்து. முறிந்தவெம்
முடிவி லாதவோர் வேதனைக் காவியம்.
சூதி லாஅது சிக்கிச் சுழன்றது
சூட்சு மத்தை அறிந்திட முந்தினேன்.
ஏதடி அதன் இன்றைய தன்மையென்
றேங்கி னேனதால் இக்கதிக் காகினேன்!

7. பாலையிற் பசுந்தரை போல், விழி
பாய்ச்சி என்மனப் பந்தலில் முல்லையாய்,
கோல மென்பதற் கோர்அணி யாகினுய்;
கொஞ்சினுய்; நினை வோடையில் நீந்தினுய்.
வாலி பத்தின் சுழிப்பில் அலைப்புறும்
வண்ணம், மோதிரக் கையை உதறிஎன்
கால எல்லையில் லாத கதையினைக்
கவிதை யாக்கிக் குறுக்கி விட்டாயடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சொற்க ளிற்புதுச் சோக மிழைந்திடச்
சுந்தரக் குவை செய்திட எண்ணி,
'அற்பு தத்தை' அமைக்க முடியலே!
அகன்ரெ துங்கிய ஆவல் உலர்விஞல்
கற்ப னைக்குகைக் காரிருள் மூழ்கியான்
கவிதை யாக்கி இருந்து கலங்கிட
நிற்கி ருய்சிலே யாகிஎன் நெஞ்சிலே,
நீயு மாஇங் கோர் கவியாகிஞ ய்!

ஆசைக்கனவு

வானத்தி லேபறந் தோடம கிழ்ந்திடும்
வண்ணப் பறவைபோல் ஆகவேண்டும்—நான்
வானமெ லாம்பறந் தோடிம கிழ்ந்தபின்
வந்து புவியினில் சேரவேண்டும்
தேன்சுவை தேடித் திரிந்திடும் வண்ணத்துப்
பூச்சியை வாவென்று நானழைத்து—இங்கு
தேன்சொரி யும்நல்ல தீஞ்சுவை காட்டிடும்
சின்ன மலர்களாய் ஆகவேணடும்.
மாமலே யுச்சியின் மேலே யிருந்துகீழ்
வந்து பெருகிடும் சிற்ருருய் — நான்
பூமலர் தூவிச் சிலிர்த்து நிற்கும்மரம்
தேடித தழுவியே ஓடவேண்டும்.
வானத்திலே மழை நேரத்திலே தோன்றும்
வானவில் லின்பல வர்ணங்களாய் — நான்
மோனத் தவஞ்செய்யும் முக்தி நிலையிலே
மேகங்கள் மத்தியில் தோன்ற வேண்டும்.

— சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க வேண்டுகிறேம்

இனிமையும், புனிதமும் நிறைந்த தமிழ்மொழி எமக்கு முருகக்கடவுளால் அருளப்பட்டது! பண்டைய மொழிகளில் மேம்பட்ட தமிழ்மொழியை ஏற்றிப் போற்றிப் பெருமைப்படுத்தும் பெரியார்களைக் கௌரவம்செய்து மதிக்க நாம் முன்வரவேண்டும்!

— தபால், தந்தி போக்குவரத்து அமைச்சர்,
கௌரவ செல்லையா குமாரசூரியர்.

தமிழ் மொழிக்குச் சிறந்த செழிப்பான பண்பாடுண்டு. இதனை நம் முன்னோர் ஆக்குவித்ததினால் நாம் அதுபற்றிப் பெருமைப்படுகிறேம். இவ்வுணர்வைத் தழுவி நாம் செயல்படுவோம்!

— கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர்,
திரு. கோ. ஆழ்வாப்பின்னை.

பிறதேச தமிழ் மக்களின் வரலாறு பாரிஸ் மகாநாட்டில் படிக்கப்பட்டது; ஆனால் ஈழத்தமிழர் வரலாறு படிக்கப்படாதது கண்டு வருந்துகிறேன்.

— கலாநிதி கு. விக்கியானந்தன்.

இலங்கையையும் இந்தியாவையும் இடைநடுவே ஆழ்கடல் பிரித்தாலும், தமிழால் ஒன்றுபடுத்தப்பட்ட தொடர்பையும், பாசத்தையும் எவராலும் எக்காலத்திலும் பிரித்துவைக்க முடியாது!

— இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்,
திரு. எம். எஸ். செல்லச்சாமி.

தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் தமக்கான பண்பாடு, கலாசாரத்தை வளர்க்கப் பின்நிற்கக் கூடாது! எந்நாட்டு மக்களுடன் இணைந்து வாழ்ந்தாலும் எமது தனித்துவத்தைப் பாதுகாக்கவும் முயலவேண்டும்!

— திரு. எஸ். வி. ராமாச்சாரி.

தொடுத்தெழுதியவர்: "தென்றல்"

புதிய பல சுவையான படைப்புக்களை வாசகர்களுக்கு விருந்தளிக்கும் எமது புதிய திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில நாளிதழ்கள், சஞ்சிகைகள், நூல்களையிட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருக்கையில், தமிழ் மொழிச் சஞ்சிகைகளுக்கு மட்டும், பாரபட்சம் காட்டித் தடைசெய்ய நடவடிக்கைகள் ஏன்?

— இலங்கைத் தமிழாசிரியர்சங்கச் செயலாளர்,
திரு. டி. எஸ். கே. வணசிங்கா.

உடலில் அழகு, உள்ளத்தில் அழகு, உடையில் அழகு என எவ்வழியிலும் அழகுடன் வாழவேண்டும். இந்த அழகில் இருந்து தான் இலக்கியம் மற்றும் கலைகள் பிறக்கின்றன!

— வித்துவான் க. ந. வேலன்.

இன்று இந்தியாவிலேயே எல்லா மொழி வாசகர்களும் அறிந்த ஓர் எழுத்தாளர் 'காண்டேகர்'! அவர் இந்தியா முழுவதும் புகழ்பெற்றவர். வெளிநாடுகளிலும் அவர் புகழ் பரவியிருக்கிறது; அழகான வர்ணனைகள், முத்து முத்தான கருத்துக்கள் இவற்றுடன் கதை விறுவிறுப்பாகக் கொண்டு செல்வதில் காண்டேகர் மிகவும் கைதேர்ந்தவர்!

— 'ரசனிமுத்து', ஆசிரியர்
திரு. பி. சிவஞ்ஞானசுந்தரம்.

பல்கலைக்கழக நூலகத்துக்கு வாங்குவதற்குத் தகுதியான நூல்கள் தமிழில் வெளிவரவில்லை. சென்ற பல்கலைக்கழக நூலகத்துக்குச் சென்ற (1969-ம்) ஆண்டு தமிழ் நூல்களே வாங்கப்படவில்லை!

— சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்,
திரு. தெ. து. சுந்தரவடிவேலு.

என்தாளை லாம்எழுத்தே! எழுத்துக்கே என் ஆவி!
குன்றுதுகாண். எதெவர் கூறிடினும் என்மூச்சு!

— 'மஹாகவி' உருத்திரமூர்த்தி.

எங்கள் கலாசாரத்திற்கு அடிப்படை தமிழ் நாடுதான். இக் கலாசார பரிவர்த்தனைக்குத் தடைகள் எதற்கு? தடைகள் மூலம் கலைகள் வளருமா?

கவன ஆசிரியர்,
'கலாபவனம்' — ஏரம்பு சுப்பையா.

அந்நியர் தந்த 'மம்மி', 'டடி' தான்
"அய்போ வானும்" அரும்பிட லாச்சு!
என்ன செய்குவோம் எந்தமி ழர்க்கு
இன்னும் ரோசம் பிறந்திட வில்லை!

— கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை.

இலங்கையைப் படையெடுத்தவர்களின் சந்ததியினர்தான் இன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள்!

— நீதி அமைச்சர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுகொண்ட தமிழ் வேந்தன்

வித்துவான் வேந்தனார்

சரவணையூர்ச் சம்பந்தன்.

இலங்கையில் எங்கெல்லாம் இன்பத்தமிழுக்கு விழா எடுத்தார்களோ அங்கெல்லாம் அமுதத் தமிழ் பொழிந்த ஒரு வீரத் தமிழ்க்குரலைக் கேட்டிருந்தோம்! ஓயாத அந்தத் தனித்தமிழ்க் குரல் ஓய்ந்து இன்று ஆண்டுகள் நான்கு சென்று விட்டன!

இப்பொழுது சமூகம் மாற்றம் அடையும் காலம்!

ஆனால்,

இந்த மாற்றம் நிச்சயமாக மந்திரத்தால் வந்ததல்ல. இந்த மாற்றத்திற்காகச் சமூக, சமுதாய வளர்ச்சிக்காகப் பேனுவால், முச்சால் ஓயாது உழைத்தவீரர்கள் பலர் உண்டு.

சமூகம் முன்னேற, சமூகப் புரட்சி ஏற்பட, சமுதாயம் மலர்ச்சி பெறுவதற்காக உணர்ச்சிக் கவிதைகள் பல எழுதி ஓயாது உழைத்த உத்தமருள் வீறுகொண்ட தமிழ் வேந்தன் —வித்துவான் வேந்தனாரும் ஒருவராவர்!

ஈழத்தமிழ் மக்களிடையே இனிய கவிதைகளால் மட்டுமின்றி வீரம் மிகுந்த பேச்சினாலும் ஓயாது தமிழிலக்கியப் பணி புரிந்த வித்துவான் க. வேந்தனாரின் வீரக்குரல் ஓய்ந்து இப்பொழுது நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன.

செந்தமிழும், சிவநெறியும் தழைத்தோங்கும் சரவணையூரிலே பிறந்த வேந்தனார் தமது இளம் பிராயத்திலேயே வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் எனும் பல பட்டங்களைப் பெற்றிருந்தார். ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த இவ்விளந்தமிழ்ப் புலவர் ஆங்கிலமும் கற்றுத் தேறினார். ஆங்கிலக் கல்வியிலும் பட்டம் பெறுந்தறுவாயில் இவ்வுலகை விட்டுப் பிரிந்து விட்டார். இவரது மறைவு முற்போக்கை நாடும் சமுதாயத்துக்கு ஒரு பெரும் இழப்பாகும்.

உயிரோடிருக்கும்போது ஒரு இலட்சியவாதியைத் தமிழர்கள் புரிந்துகொள்வதுமில்லை; போற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுவதுமில்லை எனும் குறைபாடு சில காலமாக இருந்து வந்தது; அந்நிலையை யொட்டி இப் பொழுது ஒரு புதிய நிலை உருவாகியுள்ளதை நாம் காணலாம். அதாவது, எந்தச் சமுதாய எழுச்சிக்காக, அந்த இலட்சியவாதி உழைத்தானே, அதே சமுதாயம் அவன் மறைவையொட்டி அவனை மறந்தே விடுகிறது! நன்றிகெட்ட உலகம்!!

புயலின் நடுவே அகல்விளக்கைப் பிடித்துக்கொண்டு போவதுபோல அறிவின் ஒளியிலே அவதானிக்கும் பொழுது,

இவர் சிறந்த புலமைவீறு படைத்தவராக மட்டும் விளங்கவில்லை. புலமையிலே வித்துவத் தன்மை பெற்ற பிறரிடமில்லாத சில புதுமையான திறன் இவரிடமிருந்தது என்றுல் மிகையல்ல. எழுதும் திறமையும், பேசும் ஆற்றலும் ஒருங்கே கூடப் பெற்று இவ்விரு கலைகளிலும் சமவல்லமையோடு திகழ்வது ஓர் அசாதாரணமான திறனு கும். இதனை மிகச் சாதாரணமாகச் செய்து ஒரு சாதனையை நிலைநாட்டியவர் வித்துவான் வேந்தனுர் அவர்களாவர்.

'தமிழ்ப் பண்டிதர் ஒருவரின் சொற்பொழிவு' என்றதுமே சபையினர் எழுந்து வெளிச்செல்லும் ஒரு காலத்திலே, அப்படி வெளிச்செல்லுஞ் சபையினரின் உடல், உள்ளம் எல்லாவற்றையும் காந்தமாய்ப் பற்றிஇழுத்து, அவர்களைத் 'தமிழ் வெறி' கொள்ளச் செய்த வீரத் தமிழ் இளைஞன், வேந்தனுர்! ஈழ நாட்டிலே இத்துறையில் இவர் இதற்கு ஒரு முன்னோடி எனலாம். ஈழநாட்டின் மூலைமுடுக்கெல்லாம் தமிழை வளர்க்க, வாழ்த்த, ஆராய எடுத்த விழாக்களிலெல்லாம் தமிழ் மொழி புதுமை பொலிய நின்று முழங்கிய வேந்தனுரை யாம் எளிதிலே மறந்திட முடியாது.

முற்போக்கு இலக்கிய இயக்கம் இந்நாட்டில் வலுவடைந்து வரும் இவ்வேளையிலே,

எழுத்துக்கு ஒரு நோக்க முண்டு; எழுத்தாளனுக்கு ஒரு பணியுண்டு என்பதை உணர்ந்த வேந்தனுர் தமது கவிதைகளில் ஓர் இடத்தில்,

"உற்றெழுந்த சிந்தனையின்
ஒளியால் இந்த
உலகோம்பும் எழுத்தாளன்
உறங்கு வானே?

என அறைந்து கேட்பது கவனிக்கத்தக்கது.

இதுவரை காலமும் மாற்றமடைந்து வராத பிற்போக்குச் சமுதாயத்தை நோக்கி,

"மாறுகின்ற உலகில் நாங்கள்
மாற்ற மின்றி வாழ்வதால்
சேறுகொண்ட கிணறு போலச்
சிறுமை கொண்டு
வீழ்வதோ?"

எனப் பாடுகின்றுர்.

உலகில் பொதுமை எண்ணம்; வீரனெங்கள் வேந்தனின் உள்ளத்தில் ஊறிச் சுரக்கும் விதத்தைப் பாருங்கள்.

"பொருளும் நிலமும் எவர்க்கும்
பொதுவாய் இருத்தல்
வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார்:

"அந்தாதி கோவைகளைப் பார்த்துப் பார்த்து அவை போலப் பாடுகின்ற புலவர் நாண" அமரகவி வேந்தனரின் குரல் ஒலித்தது!

"இந்திரச் செல்வத்தின் இன்பம்
—இங்கு
எய்தியே ஒருசிலர் வாழக்
கந்தைக்குங் கஞ்சிக்கும் மக்கள்
— நின்று
கதறிடும் போதென்ன
காதல்?"

கஞ்சிக்கு வழியில்லாத சமுதாயத்திலே காதல் எதற்கு என அவர் எழுப்பிடும் கேள்வி சிந்தனைக்குரியதன்றே?

'பாடுகின்றோர் எல்லோருங் கவிஞரல்ல' எனப் பகிர்ந்த பாவலன் வேந்தனர், கவிஞர் என்போர் மக்களைப்பற்றிப் பாடி, மக்களுக்காகப் பாடி, மக்கள் கவிஞர்களாக விளங்குபவர்களைத்தான் கருத்தில் வைத்திருந்தார்:

"கஞ்சி யின்றி நொந் தலைந்து
சுதறு கின்ற குரலிலே,
விஞ்சு கின்ற சுதந்தி ரத்தின்
வீர நாதங் கேட்குதே!"

என்ன உயிர்த்துடிப்பான கவிதை! ஈழத்தறிஞனின் ஆவேசத்துடிப்பு!!

தமிழர்களுடைய ஒற்றுமையைக் குலைத்து, மானத்தைப் போக்கும் சாதிப்பாகுபாட்டை விட்டு வைத்தாரா, வேந்தனர்?

"ஆழு கின்ற எம்மை யின்றும்
அடிமை யாக வைத்திடும்
தாழு கின்ற சாதி சமயச்
சண்டைக் கான மெரியவே!"

என்றார், சபித்தார்! ஆழ்ந்த கல்வியறிவோடு, நாவன்மையும், எழுத்து வன்மையும் கொண்டு விளங்கிய வேந்தனர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், கவிதைகள் கணக்கற்றவை. அவை காலத்தாற் சாகாத இலக்கியக் கருவூலங்களாய் அன்னரின் தமிழார்வத்தின் அழியாச் சின்னங்களாய் நின்று நிலவும். தனிப்பட்ட முறையிலும், பாடநூற்

வேந்தனரைப்பற்றி.... — பொன்னம்பலம், எம். ஏ.

சாதிக்கட்டுப்பாடுகளையும், பேய், பில்லி, சூனியம் போன்ற மூடநம்பிக்கைகளையும் வேம்பென வெறுத்தார். அவருடைய சொற்பொழிவில் ஒரு புதிய ஜனநாயகத் தமிழர் வாழ்க்கை முறையைப் பாரதிவழிநின்று காணத் துடித்தார் என்பது தெளிவு!

சைவசமய அபிமானியாகத் திகழ்ந்த அவர், நாவலர் பெருமானின் உத்வேகத்துடன் அந்நிய கலாச்சாரப் பிடியினின்று இலங்கை மக்களும், தமிழ்ப் பாரம் பரியமும் காப்பாற்றப்பட வேண்டுமென்று நம்பித் தனது வாழும் முறைகளைக்கூட அதற்கு ஏற்றபடி ஆக்கிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை உறுப்பினராகவும், வேந்தனர் எழுதிய இலக்கிய, சமய நூல்களும், பாடங்களும், மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் என்றென்றும் பெரும் பயன் பயப்பனவாகும்.

மக்கள் மனதிலே ஆவேசக் கனல்மூள முழங்குஞ் சொல்வளமும், புரட்சி வேகமும் கொண்ட வேந்தனர் குழந்தைக் கவியாகவுங்கூட விளங்கினர். என்ன புதுமை!

'அம்மாவின் அன்பு' என்னும் அவருடைய கவிதை மூலம் 'பாலைக் காய்ச்சிச் சீனிபோட்ட பாவலன்' என்ற இரசிகமணி கதை செந்தில்நாதனிடமிருந்து தக்க பாராட்டைப் பெற்றது மட்டுமல்ல, புகழ்பெற்ற அக் கவிதைமூலம் ஈழநாட்டுப் பள்ளிச்சிறார்களுடைய சிந்தையிலே சிரஞ்சீவியாக ஓர் இடமும் பெற்றுவிட்டார்.

ஆங்கிலங் கற்றோர் தமிழைக் குறைத்துப் பேச நேர்ந்த விடங்களிலெல்லாம், ஆண்மையும், ஆர்வமுங் கொண்டு தமிழின் அருமை பெருமைகளை விளக்கிச் சொற்போர் புரிந்து வெற்றியீட்டியதை யாம் நேரே கண்டு வியப்புற்றோம் என நவாலியூர் சோ. இளமுருகனார் இத் தமிழ் வேந்தனைப் பாராட்டுகிறார்கள். அப்படிப்பட்ட வியத்தகு வீரத் தமிழ்ப்புலமை கொண்டு விளங்கிய வித்துவான் வேந்தனாரின் கவிதைத் தொகுதிகள், "கவிதைப் பூம்பொழில்" எனும் பெயரில் 1964-ல் வெளிவந்திருக்கின்றது. அவற்றிற்குப் பின்பு ஆக்கப்பட்ட கவிதைகளையும் சேர்த்து, அன்னாருடைய கட்டுரைகள் தொகுத்து ஒரே நூலில் பிரசுரிக்கப்பட்டு, படிக்கப்படுவது, நமது பாரம்பரிய மொழியார்வத்தைப் பேணிக் காப்பதற்குப் பேருதவியான சாதனமுமாகும்.

ஈழத்து இசைக்கலைஞர்கள் இவ்வெழுத்தாள மன்னனின் பல கவிதைகளை இசைப்படுத்திக் குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

தனித் தமிழ் காத்த வேந்தனார் நாமம் வாழ்க!

தமிழர்க்கு உலகப்புகழ்!

ஆரெமை ஆண்டா லென்ன
அவரவர்க் கேற்ற தாகக்
காரியம் புரிந்து வாழ்ந்து
காலத்தைக் கழிப்போம என்னும்
ஓரினம் தமிழர் போல
உலகத்தில் எங்கும் இல்லை!

— கவிஞர் வேந்தனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி

— முருகையன்.

பண்டை நாள் ஏட்டுப் பழஞ் சுவடிகளுட்
பதுங்கிய தமிழ் மொழி இன்று
விண் தொட நிவந்த வீறுடன் கிளம்பி
வெளிப்பட வந்தமை கண்டோம்.
தொண்டர்கள் பலபேர் துறைதொறும் உழைக்கத்
தொடங்கினர்; ஆதலினாலே
உண்டு தான் போலும் உயர்வெனச் சற்றே
ஆறுதல் உறுகிறோம். ஆனால்.....

பல்லிசொல்வது போல் ஒரு சிலர் இந்தப்
பணிகளைப் பழிப்பதும் அறிவோம்.
அங்கொரு பகலாய் அன்னியம் பேணி
அதன் மயமாகவே ஆனோர்
வெல்புது ஞானம் தமிழ்வழிப் பாய
வியர்ப்பவர் தொழில் விழல் என்பார்.
இல்லை ஓர் பயனும்; வீண் செயல் என்பார்—
இம்மியும் துணிதிறன் இல்லார்.

அடுப்படிக் கரையில், கிணற்றடிக் குச்சில்
அடக்குவோம்; தமிழ்க்கொரு கோயில்
எடுத்து நாம் பூசை இயற்றுவோம்—போதும்.
எறிவெடி, சிகரங்கள், வாணம்
படைப்புகள், பொங்கல் போன்றவை புரிவோம்,
பழம்புகழ் பாடுதுவோம்: ஒரு நாள்
ஒதுக்குவோம அதற்காய்; இத்துடன் கடமை
ஒழிந்ததே என அவர் நினைவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன மனிதர் அப்படிப் பட்டோரா.
புத்திளந் தலைமுறை யாரோ
இராதன தமிழில் இரா இனிப் புவியில்
எனும்படி முயல் திறன் உடையார்.
தராதரம் அறியும் விருப்பமும் உடையார்.
தமிழ்த்திறன் பெருக்கலில் மூனைவார்,
பராமுக நோக்கை ஒழித்தனர்; நமது
பாலரும் பரபரப் படைந்தார்.

மாணவ மணிகள் அருவிபோல் ஒழுகும்
வழுவிலா உயிர் நடைப் பேச்சும்,
நீணலம் குழைந்த பாநவில் திறனும்,
நித்திலக் கோவையே போன்று
காணுறும் எழுத்தும் உடையவராயின்,
கருத்திலும் தெளிவினைப் பெறுவார்.
கோணுதல் இல்லா அறநயம் உணர்வார்;
குளிர்மையும் விசாலமும் உறுவார்.

தமிழ்த்திறன் பெற்ற கலைஞர்கள் கூடிச்
சந்திரன், நெபுலங்கள் வரை போய்
அமைப்புறும் புதிய அறிவின் ஓர் சிறிய
அணுவையும் தமிழ் செய்து தருவார்.
நிமிர்ச்சியை அடையும் தமிழ் நிலம். அன்றே
நிபுணர்கள் ஆகுவார், நமரும்.
சுமைப்பொருள் போலப் பிறர் மொழி காவும்
சுமடர்கள் நாணமுற் றகல்வார்.

ஆகையால், இனையோர் நடுவிலே தமிழ்
ஆர்வத்தைப் பாய்ச்சிடும் முயற்சி
தேவையே மிகவும். தேவையை நிறைக்கும்
செயல்களை நாம் வரவேற்போம்.
வாகை சூடிடுவாள் எங்கள் தாய் ஒரு நான்,
வாய்ந்த இவ் வகைப்பணியாலும்.
போக, சீ, ஒழிக இடையிருட் காலம்,
புலருக பொழுதென எழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னன் பதி

"சர்வசித்தன்"

முத்தொள்ளாயிரத்தின் முத்துக்குவியல்களிடையே ஒருநாள் நான் மூழ்கியிருந்தவேளை; என்னைக் கேட்காமலேயே எனது 'கற்பனைத்தேர்' என்முன் வந்து நிற்பதைக் கண்டேன். எப்போதாவது எனது 'தேர்' வந்து நின்றால் அதன் அர்த்தமே புறப்படு என்பதாகத்தானிருக்கும். நான் புறப்படாவிட்டால் அதோகதிதான்; பிறகு நான் நினைத்தபோது 'அது' வருவதற்கு முரண்டுபிடிக்கவாரம்பித்து விடும். அதற்குப் பயந்தவனாய் உடனே புறப்பட்டு அதனில் ஏறிக்கொண்டேன். கண்கள் தாமாகவே மூடிக்கொண்டன.

கண்களை விழித்துப் பார்க்கிறேன். சங்ககாலத் தென்னாட்டின் வாயிலிலே எனது தேர் வந்து நிற்பதைக் கண்டேன்: அரண்டு; மிரண்டு சுற்றிப் பார்க்கிறேன்.

சங்கம்வைத்துத் தமிழ் வளர்த்த தென்னன் பதியல்லவா பாண்டிநாடு! மொழி வளர்த்த காரணத்தால் அந்நாட்டார் வீதிகளிலே கருணை வெள்ளம்; பழிசொல்லும் மாற்றாரைப் புறமுதுகிட்டோட்டிவிடும் புயவலிமை; எறிகின்ற வேலனைத்தும் மாற்றாரின் நெஞ்சினையே குறிபார்க்கும் போர்த் திறமை!... இப்படி இன்னும் பல வீரப்பெருமைகளும் கொண்ட நாட்டு மக்கள் வாழும் நாட்டிலே எனது தேர் நிற்கின்றது.

கடமை வழுவாத கண்ணியத் தோர் வாழ்கின்ற இடமாகையால் இயற்கையும் மகிழ்ந்து சிரிக்கிறது. நிலமகள் பொன்னைப் பரிசாக அந்நாட்டாருக்கு வழங்குகிறாள். ஆகையால் அங்கு பொன்னுக்குப் பஞ்சமென்பதில்லை.

பொன்னுக்குப் பஞ்சமில்லை— உண்மை. இன்பத்தமிழுக்கு மட்டும் பஞ்சமா! என்ன? இயலும், இசையும், நாடகமும் ஒன்றுகக் கலந்து மக்களிதயங்களை நிறைவித்து மிகுதியெல்லாம் நூல் வடிவில் ஆங்காங்கு தேங்கிக் கிடக்கின்றன.

நிலமகளைப் பார்த்த கடலரசி என்ன 'சும்மா' இருப்பாளா? தமிழ் வளர்க்கும் பாண்டியர்க்குப் பரிசில் கொடுக்க அவளும் நினைத்தாள். சிறந்த முத்துக்களைத் தென் கடலோரத்திலே கொண்டுவந்து சிதறிவிட்டாள். அம் முத்துச் சிதறல்களை அள்ளுவதற்குப் போட்டிபோடும் மக்களின் கூட்டந்தானென்ன! அப்பப்பா..! தமிழர்களுக்கு எதிலும் போட்டியிடும் ஆசைதான் போலும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலோரத்தைவிட்டு அப்பால்... தூரத்தே பார்க்கிறேன். அங்கே இடுப்பில் செருகிய கூடையுடன் கடலுள் பாய்ந்து மூழ்கிக் கொண்டிருந்தார்கள் வேறு சிலர். என்னவென்று பார்க்கும் அவாவினுல் தேரைத் தட்டிவிட்டேன். என்ன ஆச்சரியம்! வெண்சங்குக் குவியல்கள் ஒருபுறம் குவித்துவைக்கப்பட்டிருந்தன. அவற்றினருகே தென்னுட்டு இளம் பெண்கள் தங்கள் கை வளையல்களுக்கேற்ற சிறு சங்குகளைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். அந்தப் பெண்களின் புன்னகையொன்றுக்காகத்தான் இந்த மறவர்கள் கடலின் அடிவரை பயமின்றிச் செல்கிறார்களோ? கடலாழம்வரை சென்றுவது இந்த மெல்லியலாரின் மனதில் ஆழமாக இடம் பிடித்துவிட்டால் அவர்கள்பாடு வெற்றிதான் என்று எண்ணியவாறே தூரத்தில் தெரிந்த மலையை நோக்கி விரைந்தேன்.

கருந்திரளொன்று என் கண்ணில் தெரிந்தது. அத்தனையும் யானைகள் தென்னுட்டின்மீது படையெடுப்பு ஏதாவது... என் மனம் வெகுண்டது. பார்புகழும் தென்னன்மீது படையெடுக்கும் துணிவு யாருக்கு உண்டு? ...என தருகே வந்த ஒரு பெரியவரை அணுகி, 'அது என்ன ஏதாவது படையெடுப்பா" என்று கேட்கிறேன். கிழவர் தன் பொக்கை வாயைத் திறந்து சிரிக்கிறார். எனக்கு எதுவும் புரியவில்லை. ஏன் என்னும் பாவனையில் கிழவரைப் பார்த்து நிற்கிறேன்... கிழவர்தான் கூறினர்: "தம்பீ! இது படையெடுப்பல்ல. நமது நாட்டு யானைக் கூட்டங்கள் போர்ப்பயிற்சி முடித்துவிட்டு மலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. அதோ அந்த வீரர்கள் யாவரும் பாண்டி நாட்டார்தாம். இவைமட்டுமல்ல இன்னும் எத்தனையோ யானைக் கூட்டங்கள் இந்த மலைகளின் சாரல்களில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகள் வரும் நேரமாகிவிட்டது. போகும் வழியில் அவறறைக் கண்டு பயந்துவிடாதே" என்று கூறிச் சிரித்தார் அந்தப் பாண்டிக் கிழவர். பாண்டியன் வீரத்தில் எனக்கு ஐயமேற்பட்டுவிட்டதே என்ற நாணத்தில் கிழவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டேன்.

மேலும்; குறிஞ்சியும், முல்லையும், மருதமும், நெய்தல் வெளிகளும் ஏன் பாலைகளுங்கூட; அழகுபடுத்தும் பாண்டிநாட்டின் மீது படையெடுக்கும் எதிரி வேந்தர் மார்பில் தென்னன் வேல் நுனிகள் படுவதால் மாற்றரும் அவனை வணங்குகிறார்களாம். அதனால் அவன் வளர்க்கும் தமிழைப் பணிகிறார்கள்; தமிழன் வீரத்தால் மொழியின் பெருமை இன்னும் துலங்குகிறது என்று கூறும் பாண்டி நாட்டு மக்களையும் சந்தித்துவிட்டு எனது கற்பனைத் தேரைத் திருப்பிவிடுகிறேன்... ..

இவ்வினிய அனுபவத்தை எனக்கு அளித்த முத்தொள்ளாயிரப்பாடலை நீங்களும் சுவைக்கலாமல்லவா..... இதோ பாடல்:

"பார்படு செம்பொன்
பதிபடுப முத்தமிழ் நூல்
நீர்படுப வெண் சங்கும்
நித்திலமும்—சாரல்
மலைபடுப யானை
வயமறன் கூர்வேல்
தலைபடுப, தார் வேந்தர்
மார்பு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பவேண்டிய முகவரி :

ஆசிரியர்,
விஞ்ஞானப்போட்டி
13, ஓயன் ஸைட்,
தெகிவளை.

விஞ்ஞானப்போட்டி இல. 1.

விடைப்பத்திரம்

பெயர் : .....

விலாசம் : .....

.....

பாடசாலையின் பெயர் : .....

விடைகள் :

1; அ. .....

ஆ; .....

2; .....

3; அ; .....

ஆ; .....

இ. .....

4; .....

கையொப்பம் : .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டு ரகசியம்

சீட்டுக்களில் ஆட், டைமண்ட், கிளாவர், ஸ்பேட் என்று குறிப்பிடுகிறோமல்லவா. இவைகளிலுள்ள உருவரகசியம் எது தெரியுமா? ஆட்டின் என்ற சீட்டிலே இருப்பவர் சார்லஸ்மேன். இவர் ரோமானிய சாம்ராஜ்யத்தை கி. பி. எண்ணூறும் ஆண்டில் மீண்டும் உருவாக்கியவர். டைமண்ட் என்ற சீட்டிலே காணப்படுபவர் ஜூலியஸ் சீசராகும். ஸ்பேட்டில் இருப்பவர் கோலியாத்தை வீழ்த்திய இஸ்ரேல் அரசரான டேவிட் ஆகும். கிளவர் என்ற சீட்டிலிருப்பவர் மாவீரன் அலெக்சாண்டர்.

*

கனவு ரகசியம்

கனவில் காணபதைத் தான் நனவில் அடைய முயற்சிக்கிறோம். நினைவில் பிரதிபலிப்புத்தான் கனவு. நினைவு இல்லையேல் கனவு இல்லை. கனவு இல்லையேல் முயற்சிஇல்லை. முயற்சி இல்லையேல் வெற்றியில்லை. இதுதான் கனவுரகசியம்.

ஆதாரம் : "ரீடர்ஸ் டைஜஸ்ட்"

அனுப்பியவர் : திருமதி இராமையா,
(களனி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசி

நாடகம்

காட்சி: ஒன்று:

இடம்: அரண்மனை:

(யாழ்புரி மன்னனுடன் மகள் இளவரசியும் சிம்மாசனத்தில் இருக்கின்றனர். இளவரசியின் பிறந்த நாளிற்காக அவையில் நாட்டியம் நடைபெறுகிறது. அப்பொழுது ஓர் ஒற்றன் வருகிறான்.)

ஒற்றன்: "அரசே! சிங்கபுரியிலிருந்து தூதுவன் வந்திருக்கின்றான்."

அரசன்: "வரச்சொல்: அமைச்சரே! இவன் ..... வரவின் நோக்கம் யாதோ?"

அமைச்சர்: "வந்தபின் தெரிந்து கொள்வோம்:"

(தூதுவன் வந்து ஓலையைக் கொடுக்கிறான்: அரசர் ஓலையை விரித்துப் படிக்கிறார்.)

அரசன்: (வாசித்ததும் ஒரு விஷமச் சிரிப்புடன்) "ஐந்தாண்டுகளாக மறந்திருந்த சிங்கபுரி அரசன் இப்பொழுது கப்பப்பணம் முழுவதையும் கட்டும்படி ஓலை அனுப்பியுள்ளான். அமைச்சரே! இதற்கென்ன யோசனை?"

தளபதி: "யோசனை என்ன வேந்தே? கப்பம்கட்டுவதில்லை யென்றே தீர்மானித்துவிடுங்கள்!—இனியும் நாம் கப்பங்கட்டி வாழ்ந்தால் நம்மை ஒரு சிறு நாடாகவே நினைத்துவிடுவான் அந்தச்சிங்கபுரி மன்னன். அவனிடம் படைபலமுண்டென்று மிரட்டுவான். அதற்கு நாம் பயந்துவிட்டால்—அவ்வளவுதான் அரசனின்நிலை அளவிற்கு மீறிவிடும்."

தமிழரசி: "அப்பா! சிந்தித்து முடிவிற்கு வாருங்கள். சிங்கபுரி அரசன் சாம்பிராச்சிய சக்கரவர்த்தி அல்லாமலும் தனித்துப் போர் செய்யும் திறன் அவன் மகனுக்கு உண்டப்பா!"

அரசன்: "அமைச்சரே! உமது யோசனை...?"

அமைச்சர்: "சிந்திக்க வேண்டியது அதிகமுண்டு மன்னா!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி : ''சிந்திக்க வேண்டியதேன்? சிறுத்தை சீறுகிறதென்றால் அதன் வாயைக்கிழித்துவிட வேண்டியதுதானே!''

ஒற்றன் : ''அரசே! நான் போகவேண்டும்?''

தளபதி : ''போ! இனியும் இந்த யாழ்புரி அரசன் தர்மச்சேனன் கப்பம்கட்டி வாழ்வதில்லை என்றுசொல். முடியுமானால் போருக்குத் தயார் என்பதையும் அறிவித்துவிடு ... இம் ... !''

அரசன் : ''தளபதியாரே! இளமையின் துடிப்பும், வீரத்தின் வேகமும், நாடுகாக்கும் பணியும், நல்லதோர் தொண்டும் உம்மிடத்தில் இருக்கும்பொழுது நான் பயப்படவேண்டியதில்லை ..... ! ஆனால் ..... !''

தளபதி : ''ஆனால் என்ன அரசே? நமது நாடு, நமது மக்கள், காட்டைவெட்டிக் களனியாக்கி மேட்டிற்குத் தண்ணீர் பாய்ச்சிப் பயிர் வளர்த்து நாளெல்லாம் உழைத்துச் சேர்த்த செல்வத்தை வேற்று நாட்டான் சுறண்டி வாழ்வதென்றால் அதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது மன்னா!''

அரசன் : ''நானும் அப்படித்தான் முடிவுகட்டிவிட்டேன். உன் போன்ற ஒரு வீரன் எனது நாட்டிற்குத் தளபதியாகக் கிடைத்ததே பெருமைதான். நல்லது நாளை சந்திப்போம்.''

திரை

காட்சி : இரண்டு.

இடம் : சிங்கபுரி அரசன் மாளிகை.

அரசன் உலாவிக்கொண்டு சிந்தனை செய்கிறான். அப்பொழுது அமைச்சர் வந்து,

அமைச்சர் : ''அரசே! யாழ்புரி சென்ற தூதுவன் இன்னும் வரக் காணவில்லையே''

அரசன் : ''அதைப்பற்றித்தான் நானும் சிந்தித்துக்கொள்கிறேன்!''

(அப்பொழுது யாழ்புரி சென்ற தூதுவன் அங்குவந்து யாழ்புரித் தளபதி சொன்னவைகளைக் கூறுகிறான். அதைக் கேட்டதும் அரசன் கோபங்கொண்டு)

அரசன் : ''அவ்வளவிற்கு வந்துவிட்டானா அந்த அறிவுகெட்டவன்? அழிவுகாலம் கிட்டிவிட்டது அந்த அடிமைக்கு. போருக்குக் கிழம்பிவிட்டான் புல்லன்! பொறுத்திருந்து பார்ப்போமென்றால் பொறுமையைச் சோதிக்கிறான் பொடிப்பயல்! சாம்பிராச்சிய சக்கரவர்த்தி இந்தச் சிங்கபுரி மன்னன் என்பதை மறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டான் அந்தமடையன்! சிற்றரசன் என்று நினைத்தால் சிற்றம் கொள்ளுகிறான் அந்தச் சிலந்தி. அமைச்சரே! தீப்புரிச் சிற்றரசன் நெடுமாறனுக்கும் ஓலை அனுப்பிவையும் நாளைக்கே கப்பப்பணம் முழுவதையும் கட்டும்படி: இல்லையேல் விபரீதம் விளையுமென்பதையும் அறிவித்துவிடும்!''

அமைச்சர் : ''அரசே! தீப்புரிச் சிற்றரசன் முறைப்படி திறை கட்டி வருகிறான் மன்னா!''

அரசன் : ''பார்த்தீரா அமைச்சரே! அந்தச் சிற்றரசனுக்குள்ள அறிவுகூட இல்லையே இச்சிறுநரிக்கு ! இம்..... ! இதற் கொரு முடிவு கட்டவேண்டும். உமது யோசனை என்ன?''

அமைச்சர் : ''எனது யோசனை என்ன வேந்தே! திறைப்பணம் கட்ட வேண்டும், இல்லையேல் சிறைக்கூடம் காக்கவேண்டும்! அதன் பின் யாழ்புரிக்குத் தாங்கள் ஏகபோகமன்னன்!''

(ஒருவித விஷமச் சிரிப்புடன்)

அரசன் : ''நல்லமுடிவிற்கு வந்துவிட்டீர் அமைச்சரே; நானும் இதைத்தான் முடிவாக்கிவிட்டேன். நாளைக்கே இதற்குச் சரியானமுடிவு: மற்றைய சிற்றரசர்களுக்கும் ஓலை அனுப்பிவையும்.''

திரை

காட்சி : மூன்று;
இடம் : யாழ்புரி மாளிகையின் அத்தப்புரம்.

தமிழரசியும் தளபதி விக்கிரமனும் நிலாவின் அழகைப்பார்த்து மெய்மறந்தவர்களாய் இருக்கிறார்கள்.

விக்கிரமன் : ''தமிழரசி! அந்தநிலா இந்த உலகிற்கு எவ்வளவு நன்மை செய்கிறது பார்த்தாயா?''

தமிழரசி : ''அதை ஏன் இப்பொழுது சொல்லுகிறீர்கள்?''

விக்கிரமன் : ''அதைப்போல் நீயும் என் ஆசையை நிறைவேற்ற ஓர் அழகு நிலாவாக வந்திருக்கிறாய் என்பதற்காகவே சொல்ல வந்தேன்.''

தமிழரசி : ''போதும் உங்கள் வர்ணனை! இவ்விதம் நாங்கள் கன்னிக் காதல் கொள்வதை அப்பா அறிந்துவிட்டால் அமாவாசை வந்துவிடாதா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரமன் : ''அமாவாசை இருட்டிலும் அஞ்சாமல் நடக்கும் ஆற்றலுள்ளவன் இந்த விக்ரமன் என்பதை மறந்து விடாதே தமிழரசி!''

தமிழரசி : ''உங்கள் வீரம் போர்க்களத்தில்தானே செல்லும்!''

விக்ரமன் : ''வீரத்திற்கு வெற்றிப்பரிசாகத்தான் நீ கிடைக்கப் போகிறாய்!''

தமிழரசி : ''அத்தனையும் கனவு!''

விக்ரமன் : ''கனவு நனவாகும் நாள் வெகுதூரத்தில் இல்லைக் கண்ணே!''

(கையைப்பிடித்துத் தன்மார்போடணைத்து)

தமிழரசி : ''அத்தான்!''

விக்ரமன் : ''முத்தம் வேண்டுமென்று கேட்கின்றாயா?''

தமிழரசி : ''போங்கள் அத்தான் உங்களுக்கு எப்பொழுதுமே ...''

விக்ரமன் : ''உன்மீது ஆசையென்று சொல்கிறாயா?''

தமிழரசி : ''அதுவுமில்லை!''

விக்ரமன் : ''அவசரப்படுகிறேன் என்று சொல்ல வந்தாயோ''

தமிழரசி : (செல்லமாக) ''சரியாகச் சொன்னீர்கள்.''

விக்ரமன் : ''கண்ணே! இளமையென்ற அருவிக்கரையிலே பருவ மென்ற ரோசா பூர்த்துக் குலுங்குகின்றவேளை ஆசையென்ற தென்றல் அதைத் தழுவவந்தால் வேண்டாமென்று சொல்லி விடுமா? அல்லது தேனருந்த வண்டுவந்தால் அதைச் சீயென்று தள்ளிவிடுமா?''

தமிழரசி : ''போதும், போதும்....., உங்கள் இஷ்டம்.''

விக்ரமன் : ''அப்படியானால், இந்தவண்டு இந்த மலர்மீது தேனைப் பருகலாமா?''

(தமிழரசி வெட்கத்தால் தலை குனிகிறாள்)

தமிழரசி : ''அன்பே! என்னைக் கைவிடமாட்டீர்களே?''

விக்ரமன் : ''கண்ணே! இன்னமுமா அந்தச் சந்தேகம்?''

தமிழரசி : ''நான் பாக்கியசாலி!''

(இருவரும் பாட்டு, பாட்டுமுடிந்ததும் திரை விழுகிறது)

திரை — வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

நீலநிற நைலெக்ஸ் சாரி

— மாயக்கண்ணன் —

"அப்பாடா" என்ற பெரு மூச்செறிந்தவாறு ஆசனத்தில் அமர்ந்துகொண்டேன்.

"தம்பி நான் காலமையே அங்கு போயிடுவன்; வேறவேலை யும் அங்க எனக்குக் கிடக்குது. நீங்கள் இரண்டமுக்காலுக்கு ஒரு எக்ஸ்பிறஸ்இருக்குது; அதை எடுத்தீங்கெண்டுசொன்னா நாலுமணிக்கெல்லாம் அங்கு வந்திடலாம்."

செல்லத்துரை அண்ணன் சொன்னசொல்லுத் தவறமாட்டார். அது எனக்கு நல்லாத் தெரியும். என்ன செய்வது எனக்கு ஒரு மணித்தியால சோட்லீவுதான் கிடைத்தது.

"அண்ணே! இந்த பஸ் பரித்தித்துறைக்கு எத்தனை மணிக்கு போகும்"

"இப்ப நாலுமணிக்கு வெளிக்கிடும். எக்ஸ்பிறஸ் எண்ட படியால் போய்ச்சேர ஒருமணித்தியாலம் எடுக்கும்."

"என்னவோ நல்லபடியாய்ப் போய்ச்சேர்ந்தால் சரி" என்று மனதில் இறைவனை வேண்டிக் கொண்டேன்.

பஸ் புறப்பட்டுவிட்டது...

பக்கத்தில் இருந்தவரின் பத்திரிகையை வாங்கிப் புரட்டித் தலையங்கங்களைப் பார்க்கும்போதே சிறிது கண் மயக்கம்.

"கோப்பாய் இறக்கம் இருக்கே" பஸ் கொண்டக்டரின் சத்தங் கேட்டுத்தான் மீண்டும் நினைவு வந்து வெளியே பார்க்கிறேன்; ஒரேகூட்டமாய் முட்டி மோதிக்கொண்டு பலர் பஸ்சில் ஏற முனைந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தினுள் ஒரு நீலநிற நைலெக்ஸ் சாரி... அப்படியே என் கண்களைக் காந்தமாய் இழுத்துக்கொண்டது; எனக்குப் பிடித்தமானநிறம் நீலம்; நீல நிறத்தில் யார் ஆடை அணிந்து வந்தாலும் அப்படியே வைத்தகண் வாங்காமல் பார்த்து ரசித்தபின் தான் கண்களை மறுபக்கம் திருப்புவேன். ஆனால் இந்த நீலநிற நைலெக்ஸ் சாரிக்குரியவள்—ஒரு அழகான இளம்பெண். அதற் கேற்றாற்போல் வெள்ளை நிற ஜாக்கெட், புன்னகைபூத்த முகம்; உடனே என் மனதில் உதித்ததாக உணர்ச்சி... வேண்டாத தெய்வங்களையெல்லாம் வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக் கொள்ளுகிறேன். என்வேண்டுதல் வீண்போகவில்லை. அவள் என் பக்கத்திலேயே நிற்க ஆண்டவன் அருள் புரிந்துவிட்டான். "ரைட்" பஸ் கொண்டக்டர் மீண்டும் குரல்கொடுக்க, பஸ் புறப்பட்டுவிட்டது. இன்னும் ஒருவரைத் தன்னும் திணிக்க முடியாத அளவுக்கு பஸ்சில் பிரயாணிகள் நிரம்பி விட்டார்கள்.

இப்போதுதான் அவளைப் பார்க்கிறேன்: எதையுமே சிந்திக்காதவள்போல் அவள் நின்று கொண்டிருந்தாள். இருந்தும் சாந்தமும் மங்காப் புன்னகையும் அந்தமுகத்தில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. அவளுக்கு எழுந்து இடம்கொடுக்க என் பொறுமை உணர்ச்சி இடந்தரவில்லை. காரணம் எனக்குப் பக்கத்தில் இருந்தவனும் ஒரு வாலிபன்.

இப்பொழுது வல்லயவெளியில் பஸ் பறந்துகொண்டிருந்தது: என் உணர்ச்சிகளும் என்னோடு போட்டிபோட்டுக்கொண்டிருந்தது: கந்தோரிலும் சினிமாத் தியேட்டர்களிலும், பஸ்ராண்டிலும் நண்பர்களோடு சேர்ந்து இளம் பெண்களைக் கிண்டல் செய்து தட்டித் தனகி அதில் இன்பங்காணும் உணர்ச்சிகளும் இடையிடையே எழுந்து என்னைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தன.

அந்த நீலநிற நைலெக்ஸ்சாறி காற்றிலேபறந்து இடையிடையே என்மேனியில்பட்டு நான் அடக்கிக்கொண்டிருந்த என் பரிச உணர்ச்சிகளைத் தூண்டிவேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது.

காற்றின் வேகத்தில் அவள் மேலாடை நழுவும்போது, உறுண்டு திரண்டு கவர்ச்சியை அள்ளித் தெளிக்கும் அவள் மார்பகங்களை மறைக்க அவள் மின் வேகத்தில் முயலும்போது, அக் காட்சியைக் குறி வைத்தாற் போல் என்கண்கள் பார்ப்பதைக் கண்டு அவள் எழில்முகம் நாணத்தால் சிவக்கும் சமயம், அப்பாடா! என் உணர்வுகள் படும் வேதனை... என்னால் என்னுணர்வுகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. முன்னால் இருந்த ஆசனத்தின் கம்பிகளைப் பிடித்துக் கொண்டிருந்த வலதுகரத்தின் பக்கத்தில்தான் அவளது விரல்களும் அவளைத் தாங்கிப்பிடித்துக்கொண்டிருந்தன.

சாந்தமும் புன்னகையும் பூத்த முகத்தை உடைய ஒருவனைத் தான் என் வாழ்க்கைத் துணைவியாக என்னுள்ளத்தில் வரைந்து வைத்திருந்தேன்.

அதே எழில்தோற்றம், அதே உருவம், அவள் அப்படியே என்னுள்ளத்து வரைபடமாய் மிளிர்ந்தாள்: இவளே என் வாழ்க்கைத் துணைவியாகக் கிடைக்கமாட்டாளா என்ற நப்பாசை வேறு என்னை நச்சரித்தது:

கிறீச்..... அதே வினாடி அவளது மென்கரம் எனதுகரத்தினுள் அகப்பட்டு என்பசிக்கும் போசனமாகிக்கொண்டிருந்தது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ந்து போனவளாய் அடுத்த வினாடியேதான் தன் கரத்தை விடுவித்துக்கொண்டாள்.

பால் பாயாசத்தை வளித்து நக்கிவிட்டு இன்னும் கொஞ்சம் கிடைக்காதாவென்று வெறும் கையைப் பார்ப்பவர்கள்போல் நான் எனது கரத்தைப் பார்த்துக்கொண்டேன்.

எதிரே வந்தபஸ் எம்மைக் கடந்து சென்றுவிட்டது. நான் வேண்டுமென்றே அச்சந்தர்ப்பத்தைப் பாவித்து அவள் கரத்தைப் பற்றிக்கொண்டேன் என்பதை அவள் புரிந்துகொண்டுவிட்டாள். ஏனெனில் என்பக்கத்தில் இருந்த அக்கரங்கள் இப்போ மேல் கம்பியைப் பிடித்துக் கொண்டிருந்தன. ஆனால் என்கால்கள் வேண்டுமென்றே அவள் கால்களோடு ஒன்றிக் கொண்டன. அவள் விடுவிக்க முயன்றும் அந்த நீலநிற நைலெக்ஸ் சாரியைச் சேர்த்துப் பிடித்திருந்த எனதுகால் விட்டுக் கொடுக்கவில்லை. பதுங்கிக் கொண்டிருந்த என் சேட்டைக் குணங்கள் இப்போது படமெடுத்து ஆடத்தொடங்கி விட்டன. ஒவ்வொருமுறையும் பஸ் திரும்பும்போதும், பிறேக் போடும் போதும் வேண்டுமென்றே எனது இடதுகரம் அவளது காலிலும் தொடையிலும் தட்டித் தனியின்பம் கண்டது.

* * *

பரித்தித்துறை பஸ்ராண்டில் சாரதி பஸ்சை நிற்பாட்டும்பொழுது சரியாக 4-55: எல்லோரும் பஸ்சைவிட்டு அவசரமாக இறங்கத் தொடங்கினர்கள். நான் அவளுக்குப் பின்னாலேயே இறங்கி அவளைப் பின்தொடர்ந்தேன்.

உண்மையிலேயே நான் அதிர்ஷ்டசாலிதான். நான் போக வேண்டிய நாலாம் குறுக்கு வீதியிலேயே அவளும் போய்க் கொண்டிருந்தாள். ஒருதடவையாவது அவள் திரும்பிப் பார்க்க மாட்டாளா? என்று ஏங்கிக் கொண்டே அவளைப் பின்தொடர்கிறேன்.

"எப்படியாவது இவளின் பெயரையும் இருப்பிடத்தையும் அறிந்துவிட வேண்டும். என்ன பாடுபட்டாவது செல்லத்துரை அண்ணனிடம் சொல்லி இவளை..." மின்வேகத்தில் என் சிந்தனை சுழன்று இப்படி ஒரு முடிவுக்கு வந்தது.

நடையின் வேகத்தைக் கூட்டி அவளை நெருங்கிவிட்டேன், "மிஸ் உங்கபெயர்..... உங்க வீடு..... நான் உங்களை...." ஏதோ ஒருவித அச்சத்தாலும், வெட்கத்தாலும் என் நாக்கு அங்குமிங்கும் வளைந்து வளைந்து மனதில் இருந்ததை பேசமுடியாது தன்னிருப்பப்படி சிலவார்த்தையை வெளியே கொண்டு வந்தது. அவள் திரும்பியும் பார்க்காமல் நடையின் வேகத்தை அதிகரித்துக் கொண்டாள்.

என் வரவிற்காகக் காத்திருக்கும் பெண்வீட்டாரின் "இளங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ இல்லம்" நெருங்கி விட்டது:

"இஞ்சவந்து பாருங்கோ, ஆரார் வருகினமென்டு. ஆளுக் காள் தெரியாமல் பிள்ளையும் தம்பியும் ஒரே பஸ்சில்தான் வந்திருக்கினம். அசல்சோடி இனியென்ன காரியத்தைச் சட்டுப் புட்டுஎன்று முடிக்கவேண்டியது தான்"!

டிரேக்கர் செல்லத்துரை அண்ணருடைய குரல் எம்மிருவரின் காதிலும் நன்றாக விழுகிறது:

அப்பொழுதுதான் அவள் என்னைத் திரும்பிப் பார்க்கிறாள்: அந்தப்பார்வையின் வெப்பம் தாங்கமுடியாமல் வந்தவழியே நான் திரும்பிவிடுகிறேன். "தம்பி! தம்பி!! செல்லத்துரை அண்ணன்தான் என்னைக் கூப்பிடுகிறார். திரும்பிப்பார்க்காமலேயே நான்போகின்றேன். ஆமாம்; இப்படியான தவறுன உணர்வுகளோ இனி நான் திருப்பிப்பார்ப்பதில்லை என்ற முடிவுடன் தான் நான் போகிறேன்:

இலங்கை எங்கள் நாடு

பிறப்பு ரிமை யாகஈழம் போற்றிவந்த தமிழரின்
சிறப்புரிமைத் தோழர் என்றும் சிங்களவர் தானடா!

— வித்துவான் க. வேந்தனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்ட புரத்திலா முருகனை வணங்கப் போகின்றீர்கள்?

சி. அம்பலவாணர், புங்குடுதீவு

குண்டக மலர்ந்ததென்ன
மூவிரு முகமும் கண்ணும்,
குண்டல நிரையும் செம்பொன்
மௌலியும் கோலமாறும்,
எண்டரு கரமீராறும்
இலங்களில் படைத்தயாவும்,
தண்டையும் சிலம்பும் யார்க்கும்
சரணமும் தெரியக்கண்டான்.
— ஸ்கந்தபுராணம்.

சைவப் பெருமக்களுக்கோர் வேண்டுகோள்!

நான் ஆஸ்திகனு அல்லது நாஸ்திகனு என்பது விவாதத் திற்குரிய விடயமல்ல. நானும் ஒரு சாதாரண மனிதன். தெய்வம் உண்டு என்கின்ற நம்பிக்கையில் வாழ்பவன். அதிலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு புராதன ஆலயத்தின் நிர்வாகசபைத் தலைவன். ஆகவே இந்த நேரத்தில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான என்கருத்தையும் வெளியிட வேண்டும் என்பது எனது தலையாண முடிவு. ஆகவே என்கருத்தை வெளியிடுகிறேன். இலங்கைவாழ் சைவப் பெருங்குடி மக்களும் விசேடமாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வதியும் சாதிமான்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்பவர்களும், தங்களைத் தாழ்த்தப்பட்டோர்என்று தம்மைத் தாழ்த்திக்கொள்பவர்களும் தயவுசெய்து என்கருத்தினை வாசித்துப்பாருங்கள். எது சரியானது என்பது புலப்படும் என எண்ணுகிறேன்.

சைவசமய சித்தாந்தம்:

"கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

நமது நாட்டிலே கடைப்பிடிக்கும் சைவசமயக் கொள்கை சரியானதுதானு?

இதனையிட்டு ஆராய்ந்தால். நாம் சைவர்களா? நாமும் சைவத்தைக் கடைப்பிடிக்க அருகதை உள்ளவர்களா? இல்லவேயில்லை என்பது புலப்படும். இன்றைக்கு சைவர்களாகிய நாம் நூற்றுக்குத் தொண்ணூறுபேரும் அசைவர்களாய் இருக்கிறோம். இந்த இடத்தில் நூற்றுக்குத் தொண்ணூறுபேரும் சண்டாளர்கள் தான். அறுவகைச் சமயங்களில் ஒன்றுனை சைவம் போதிப்பது என்ன? நெஞ்சமே கோவிலாக அதிலே அறிவையே தெய்வமாக வைத்து அன்பையே பூசாதிரவியங்களாக அமைத்து சமர்ப்பணம் செய்யவேண்டும் என்பது தான் சைவத்தின் உண்மையான கோட்பாடு. இவற்றை சைவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் உட்பிரிவுகளான வேதாந்தமும், சித்தாந்தமும் வலியுறுத்துகின்றன? அது மட்டுமல்லாது காலத்திற்குக் காலம் தோன்றிய பட்டினத்தடிகள், ராமலிங்க சுவாமிகள், பதினெண் சித்தர்கள் சிறப்பாக விளக்கிக் கூறியிருக்கிறார்கள். இறைவன் எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன். அனைவருக்கும் அனைத்திற்கும் பொதுவானவன் என்பதுதான் சித்தாந்தம்.

அர்ச்சகர்கள்

சைவசமய அர்ச்சகர்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்! தெய்வ சந்நிதியிலே தெய்வத்திற்கும், தெய்வத்தை வழிபாடு செய்வோருக்கும் இடையில் ஒரு பாலமாக இருக்கவேண்டியவர்கள் நீங்கள்தான். இதனை நீங்கள் படித்திருக்கும் எந்த வேதமும் உணர்த்தியிருக்கும் என்றே எண்ணுகிறேன். இதனைச் சரிவர செய்வதன் மூலமாகத்தான் நீங்கள் இறைவனின் திருவடியை அடையமுடியும். பகவான் ராமகிருஷ்ண பரமகம்சர் திருநாமம் தங்களுடைய மனதிலே இருக்கவேண்டும். அப்படியில்லாது பக்தர்களுக்கும் பகவானுக்குமிடையில் நீண்டுயர்ந்த நெடுஞ் சுவராய் இருப்பீர்களேயானால் பரிதாபத்திற்குரியவர்களாய் நடுத்தெருவிலே நிற்கவேண்டி நேரிடும். பகவானும் பொறுக்கமாட்டான். பக்தனும் பொறுக்கமாட்டான். தங்கள் வேதாகமமும் கூட துணைவராது.

சாதியில் உயர்ந்த, சாதியில் தாழ்ந்த சண்டாளர்கள்

என்னையும் சேர்த்துத்தான் இப்படி அழைக்கிறேன். தேவார திருவாசகங்களை ராகத்தோடு படிப்போம். அதன் உட்கருத்துக்களை ஒருநாளும் உணர மாட்டோம். 'இரும்புமனம் குழைந்தென்னை எடுத்தாண்ட அங்கயற்கண் எம் பேராட்டி' என்று எத்தனையோ பாமரர்களுடைய உள்ளம் உருகத் தெய்வசந்நிதியிலே நின்று, ஏன் தெய்வத்தினுடைய கண் திறக்கவே பாடியிருக்கிறேன். என் இரும்புமனம் மட்டும் என்றுமே இரும்புதான். ஏனென்றால் நான் திருந்தாத சண்டாளன். பஞ்சமாபாதகங்களைச் செய்பவன் யாராயிருந்தாலும் அவன் சண்டாளன்தான். பஞ்சமாபாதகங்களில் எந்த ஒன்றினைச் செய்பவன் யாராயிருந்தாலும் அவன் சண்டாளன்தான். இங்கே சண்டாளன் என்று வேதங்கள் கூறுபவனுடைய இலக்கணம் இதுதான்.

சாதிமுறை

பகுத்தறிவாளர்களே, நாம் வாழும் யுகம், அணுயுகம். சாதிமுறையில் அரசியல் வகுத்து அதற்கு அரணாக வாழும் வாழுணர்ச்சி ராமதன்மத்தை நீதிநூலாக்கி பல்லாயிரம் ஆண்டுகள் செங்கோலோச்சிய இந்திய சாம்பிராச்சியங்கள்மறைந்து 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற மனப்பான்மையுடன் குடியரசாகத்திகளும் இந்தியாவில் சாதி பேசினால்கூட தண்டனை கிடைக்கும். இங்கே இலங்கையில் நாமனைவரும் சிறுபான்மையினர் ஆனபோதிலும்கூட பறைத்தமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழர் என்னும்பொழுது, நம்முடையோர் ஏதோ நம்நிலை தெரியாது நமக்குள்ளேயே சாதிப் பிரச்சனையைப் பெருக்கி நம்மவர் சம்பாதித்தது என்ன? யாழ்குடாநாட்டிலே 500 ஆண்டுகளுக்குமுன் வேரூன்றியதுகத்தோவிக்க சமயம்; அதற்குப்பின் இஸ்லாம் சமயம். அதன்பின் புத்தசமயம். எம் சமயத்தின் நிலை என்ன..? அன்பினையே போதிக்கும் புத்த சமயத்திற்கு முன்னுல் வன்பினையே போதிக்க முற்படும் எவரும் எங்கள் சைவ சமயத்தினைக் குழிதோண்டிப் புதைப்பவர்களே ஆவார்கள். சைவசமயத்தின் வீழ்ச்சிக்கு நீங்களே காரணமாக இருக்க விரும்பினுல் சாதிமுறையைப் பேசுங்கள்.

புனிதமானவர்களைக் கோவிலுக்குள் போக அனுமதியுங்கள்; சாதிபேசி அனுமதி வழங்க மறுக்காதீர்கள்.

சண்டாளனும் தெய்வமும்;
சாதாரணமான விடயம்.

'மனிதத்தன்மையோடு நடந்து விட்டால் அவன் தான் நான் வணங்கும் கடவுள்'

என்கிறூர் ஓர் ஞானி.

'இறைவனும் தொண்டனுள் அடக்கம்'

என்கிறூர் இன்னேர் ஞானி;

வேடவான் மீகர் பின்பு வேதியரின் மேலானூர் ஏன், தான் செய்த பஞ்சமாபாதகங்களை விட்டதனுல்.

என்கிறூர் இன்னேர் ஞானி.

இதற்குமேலாக;

சூரனுடைய கடைசிநாள் யுத்தம் தாழ்த்தப்பட்ட அசுரனுக்கும் முருகனுக்கும் யுத்தம்; தேவர்களுக்கெல்லாம் 'சூரர்', 'பூசுரர்' (நம்மை அடக்கி ஆளநினைக்கும் அர்ச்சகர்கள்) எல்லோர்க்கும் பெரிய சந்தோஷம், கடைசியாக யுத்தம் முடிகிறது. சூரன் முருகனுடன் இரண்டறக் கலக்கிறூன். என்னே ஏமாற்றம். தாழ்த்தப்பட்ட சூரன் வெற்றிக் கொடியில் சேவலாகவும் மயில் வாகனமாகவும் இடம் பெறுகிறூன்.

வெற்றி யாருக்கு.....?
சூரனுடைய மகத்தான வெற்றி!

குண்டக மலர்ந்த தென்ன
மூவிரு முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன்
மௌலியும் கோலமாறும்
எண்டரு கரமீராறும்
இலங்களில் படைத்தயாவும்
தண்டையும் சிலம்பும் யார்க்கும்
சரணமும தெரியக்கண்டான்.

'யார்க்கும் சரணமும் தெரியக்கண்டான்' 'யார்' என்னும் கடைசிப்பதம் சூரனுக்குமட்டுமல்ல, பூசுரருக்கு மட்டுமல்ல, அசுரருக்கு மட்டுமல்ல இந்தப் பிரபஞ்சத்திலே தோன்றிய அத்தனை ஜீவன்களுக்கும் காட்சிதருகிறூர் இறைவன்; இதனுள் எல்லாம் அடங்கும்.

கோவிலைப் பூட்டுவதால் பயனே கிடையாது. தெய்வம் ஒருநாள் பக்தனுக்குக் காட்சி தரலாம்; அன்றேல் பக்தனே தெய்வமாகவும் மாறலாம்;

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தமிழரின்
காதல் வாழ்க்கை

அன்பையே அகவாழ்வின் அடிப்படையாகக்கொண்ட சங்கத் தமிழன் புறத்திலே வீரத்தைப் போற்றினான். அகத்திலே காதலே மாந்தி மகிழ்ந்தான். இதனாற் தமிழர் வாழ்வு அகம் புறம் என இரண்டாகப் பிரிக்கப் பட்டிருந்தது. புறங்கை வீரமாக இருந்தால் உள்ளங்கை காதலாக இருந்தது. அறம் பொருள் இன்பம் ஆகிய உறுதிப் பொருட்களில் அறமும் பொருளும் புறத்திலும் இன்பம் அகத்திலும் இடம்பெற்றன. சங்ககால நூல்களில் புறத்தைப்பற்றிப் பகல்வன சிலவாயும் அகத்தை விளக்குவன பலவாயும் இருந்ததால் தமிழர் வாழ்வில் காதல்வாழ்வே தலைமையிடம் வகித்தது என்பது விளங்கும். இன்பம் மிகுந்த நல் வாழ்க்கையே நாட்டின் வளத்திற்கு அடிப்படை என்று நம் பினர் சங்கத் தமிழர். இதனாற் தம் நாட்டை அதன் இயல்புகளுக்கு ஏற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களாகப் பிரித்து அவற்றிற்குமுறையே புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய ஒழுக்கங்களை வகுத்தனர். இவை அன்பின் ஐந்திணை எனப்பட்டன.

உருவாலும் நலத்தாலும் ஒன்றுபட்ட இருவர் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் ஆகிய நிலைகளைக் கடந்து வழிநிலைக் காட்சியிலேயே தம் காதலை ஆரம்பித்தனர். அகத்திலே காதலைப் பேணிய சங்கத் தமிழரிடம் அதை வளர்த்து வாழும் மன வலிமை இருந்தது. இதனாற் தலைவனும் தலைவியும் அன்பால் ஒன்றுபட்டுக் களவொழுக்கத்தின்கண் நின்று பின்னர் பலரும் அறிய மணம் புரிந்து இல்லறம் என்ற நல்லற வாழ்வில் ஈடுபட்டனர். தம் காதல் வாழ்க்கையைத் தமர் எதிர்த்தபோது காதலர் உடன்போகும் உடன்போக்குமுறையும் சங்கத்தமிழர் அக வாழ்வில் இடம்பெற்றது: அவர்கள் நெஞ்சிற் கலந்த உண்மை அன்பு சாதிசமயம் முழங்கவில்லை. பட்டம் பதவி பார்க்கவில்லை. இருவர் மனமும் செம்புலப் பெயல்நீர்போல ஒருமைப் பட்டன. இதனையறிந்த தலைவன் தலைவியிடம்,

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையு நுந்தையு மெம்
முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெயல் நீர் போல
வன்புடை நெஞ்சந் தாம்
கலந்தனவே"

றெஜீனா அன்ரனிப்பிள்ளை, (B. A. Hons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறினான்: அதாவது என் தாயும் நின்தாயும் என்ன உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறை உடையவர்? நானும் நீயும் கூட எக்குடிவழி என்று அறியோம். செந்நிலத்துப் பெய்யும் மழை நீரைப் போல அன்புடைய நெஞ்சம் ஒன்றுகியது என்பதே இப் பாடலின் பொருள். செம்மண் நிலத்திலே பொழிந்த மழைநீர் அந்த நிலத்தின் செம்மை நிறத்தைப்பெற நிலமோ நீரின் தன்மையை ஏற்று நெகிழ்வது போல் இருவரும் ஒத்த அன்பால் இங்ஙனம் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். சங்கத் தலைவன்பால் தலைவி எல்லையற்ற காதல் கொண்டிருந்தாள்: இதனால் தலைவி தன் தலைவன்மேல்வைத்த காதல் நிலத்திலும் பெரிதாய் ஆழியிலும் ஆழமுடையதாய் விளங்கியது. பெற்றோரின் வற்புறுத்தலுக்காகக் கடமைக்காக வாழும் வாழ்க்கை அக்காலத்தில் போற்றப்படவில்லை: அன்புக்காகத் தாம் தேடிய காதல் வாழ்க்கையையே சங்கத் தமிழன் உண்மையான அன்பு வாழ்க்கையாகப் போற்றினான். காதலுக்காக அன்பிற்காகவே பெரும்பாலும் வாழ்ந்தான். தன் காதல் கைகூடாத போது மடல் ஊர்ந்தும் வரை பாய்ந்தும் தன் உயிர்போக்கவும் தயாராக இருந்தான். அத்துணை வலிமையுடையதாய் எம் தமிழனின் சங்ககாலக் காதல் வாழ்க்கை உரம்பெற்றிருந்தது.

இல்லற வாழ்க்கையும் காதல் வாழ்க்கையாக மலர்ந்தது: மனைவி சமூகத்தின் அச்சாணியாக இருந்தாள். அன்பு அவள் வாழ்வின் அடிப்படையான அத்திவாரமாக இருந்தது. நெருஞ்சிமலர் சூரியனே நோக்கிநிற்கும்: சூரியன் எப்பக்கம் இயங்குகின்றதோ அதேபக்கம் நெருஞ்சிப் பூவும் திரும்பித் திரும்பி நிற்கும்: அவ்வாறே காதலியும் தன் கணவன்முகம் நோக்கி நின்றாள்.

சங்ககாலக் காதல் வாழ்க்கையிலே கணவனும் மனைவியும் ஓர் உயிர் உடையவராகவே கருதப்பட்டனர். பழகப்பழகப் பால் புளிக்கும் குணம் அவர்களிடம் இல்லை. உண்மை அன்பில்லாவிட்டால் காதல் இன்றேல் அவர்கள் வாழ்க்கையிலே பயன் இல்லை என்பதைப் பண்டைத் தமிழன் நன்றாக உணர்ந்திருந்தான்.

இல்லற ஒழுக்கம் அன்பால் நிகழாதுவிட்டால் பெருங்கேடு உண்டாகும் என்பதைப் பண்டைத்தமிழர் அறிந்தனர். ஏனெனில் ஒரு தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் உயிர்போற் கருதி மிகுந்த அன்புடன் ஒழுகினாலன்றிப் பெண் பாலாரிக்குக் கற்பொழுக்கம் நிலைபெறாது. கற்பொழுக்கம் நிலைபெறாது விட்டால் நன்மக்களைப் பெறுதல் உளதாகாது. உலகில்ஒருவரோடு ஒருவர் அமைதியாய் இருந்து வாழாமற் பகையும் இனமும் கொண்டு அல்லற் படுவர். ஆதலாற்றான் அன்புகொண்ட கற்பு நிறைந்த இல்லற வாழ்க்கையைப் பெண்கள் மேற்கொண்டனர். சங்ககாலப் பெண்ணொருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி தன் கணவனைநோக்கித் தன் நிலைதளராத அன்பின் மிகுதி யால் பின்வருமாறு புலப்படுத்து கிறாள்—

"தலைவ! இந்தப் பிறப்புநீங்கி வேறு எத்தனை பிறப்புப் பிறந் தாலும் என் கணவன் நீயே ஆகுக: என் நெஞ்சு பொருந்திய மனைவியாளே ஆகுக" இங்ஙனம் இப்பெண் கூறுவதில் இருந்து அக்காலப் பெண்களின் கற்புறுதி யும் பேரன்பும் இனிது புலப்படு கிறது.

இத்தகைய அன்பு வாழ்க்கை யை நடத்தும் குடும்பமொன் றைப்பற்றிக் குறுந்தொகையிற் கிறந்த சித்திரம் உண்டு. செல் வம் மிக்க குடும்பம் எனினும் மனைவி தன் அன்புக்கணவன் மேலுள்ள தீராத அன்பால் தானே சமைக்கின்றாள். தயி ரைப் பிசைந்து புளிச்சுவையா கத் தயிர்க்குழம்பு ஆக்குகிறாள்: அவள் மென்மையான விரல்க ளால் தயிரை விரல்நோகப் பிசைந்து அடுப்பில் வைத்துப் பாகம் செய்கிறாள். இடுப்பில் அணிந்திருக்கும் மாசற்ற தூய ஆடை சமையல் செய்யும் ஆர வாரத்தால் இடையில் இருந்து நெகிழ்கின்றது. இந்நிலையில் விரல்களைக் கழுவிக்கொள்ளா மலே நெகிழும் ஆடையை இடுப் பிற் செருகுகின்றாள். குழம்பைத் துழாவிக்கொண்டு நிற்கும் குவ ளைபோன்ற அவள்கண்கள் புகை யால் பாதிக்கப்படுகின்றன. இத் தகைய இடரையும் பொருட் படுத்தாது மோர்க்குழம்பு சமைக்கிறாள் மனைவி. இக்குழம் பை அவள் கணவன் இனிதாக இருக்கிறது என்று சுவைத்து உண்கிறான். கணவன் வியந்து கூறுவதைக்கேட்டு அவள் நா ணத்தினால் முகம் கவிந்து ஒரு பக்கம் ஒதுங்கிநிற்கிறாள். அவள் முகம் மகிழ்ச்சியால் நிறைவு அடைகிறது. இத்தகைய இல் லற இன்பத்தைக் குறிக்கக் குறுந்தொகையில் வரும் பாடல் பின்வருமாறு :

"முளிதயிர் பிசைந்த காந்தண்
மெல்விரல்
கழுவுறு கவிங்கங் கழாஅ
துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை
கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப்
பாகர்
இனிதெனக் கணவ னுண்ட
லின்
றுண்ணிநின் மகிழ்ந்தன
ளொண்ணுதல் முகனே."

இன்னுமோர் அழகிய காட்சி சங்க நூலான ஐங்குறுநூற்றில் உண்டு. ஒருநாள் வெளியே சென்றிருந்த கணவன் வீட்டுக் குத் திரும்பிவந்தான். அவன் கைகால் கழுவுவதற்குள் அவன் மகன் அப்பா என்று ஓடிச் செல் லவே தகப்பன் மகனை வாரி எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டான். காற்றோட்டமான இடத்தில் அமர்ந்து மகனுடன் கொஞ்சிக் குலவி விளையாடிக் கொண்டிருந்தான். சிற்றுண்டி ஆக்கிக்கொண்டுவந்த தாயோ சிற்றுண்டியை மறந்து அதை ஒருபுறம் வைத்துவிட்டுத் தன் மகன அருகிற்சென்று கணவனை யும் மகனையும் தன் இரு கரங்க ளாலும் அணைத்துக் கொண் டாள்: இங்ஙனம் அன்பின் அடிப் படையான காதல் வாழ்க்கை யையே சங்ககாலத் தமிழர் அனு பவித்தனர். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

கொந்தளிக்கும் நடுக்கடலில் நின்று கரை தெரியாமல் தவிக்கும் கப்பல்போல, தமிழர்கள் தம் எதிர்காலத்தை நிர்ணயிக்கமுடியாமல், வளரும் குழந்தைகளின் வருங்கால வாழ்க்கையை வரையறுக்க முடியாமல் அவதியுறும் துர்ப்பாக்கியநிலை இன்று ஏற்பட்டுள்ளது.

கேட்டுச் சலித்துப்போன பல்லவியையே மீண்டும் பாடும் அரசியல்வாதிகள், வெறும் உதட்டிலிருந்தே "ஒன்றுபடுவோம்" என்ற வார்த்தைகளை வெளிக் கொண்டு வருகிறார்கள். இதனால் நாடாளுமன்ற தமிழ்த்தலைவர்களில் நம்பிக்கையிழந்த படித்த பிரமுகர்கள், செல்வந்தர்கள் பொறுமையை இழந்து, ஒன்றுகூடி "தமிழர்கள் ஒன்றுபடவேண்டும்" என்ற குரலை மட்டும் எழுப்பாது, அதைச் செயல்படுத்தவும் தீவிரமாய் முனைந்துள்ளார்கள்.

தமிழ்மக்கள் இவர்கள் குரலுக்குச் செவிமடுத்து ஒற்றுமைப்படவேண்டும். இதை ஒரு கடைசிச் சந்தர்ப்பமாகப் பாவித்துப் பயன்பெறவேண்டும்.

தமிழ் மக்களிடையேயுள்ள வேற்றுமையினால் நடுத்தரவகுப்பினர் இன்று பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே உள்ளிருந்து புதைகுழிதோண்டுவோரையும், தம் சுயவாழ்விற்காக, கௌரவத்திற்காக தமிழர் பிரிவினையை விரும்புவோரையும், காட்டிக்கொடுக்கும் எட்டப்பர் கூட்டத்தையும் அழித்து தமிழ் மக்களாகிய நாம் ஒற்றுமைப்படுவோம்.

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் விவசாயத்திற்குப் பாதுகாப்பான
சகல கிருமி நாசினிகளும்
பெற்றுக்கொள்ளக்கூடிய இடம்

யாழ். அக்கிரோ ரேடர்ஸ்

19, யூபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

பொலிடோல் — நைரசன் — என்றெக்ஸ்
ரும்ரெட் — டயத்தின் — என்தின்
பேகொன் — அன்ரகோல் — எகடோக்ஸ்
மற்றும்
வெல்டிங் ரொட்ஸ் — பெயின்ற்ஸ் — ஸ்பிறேயர்
முதலியனவும் பெற்றுக்கொள்ளலாம்.

JAFFNA AGRO TRODES
19, Jubilee Bazaar,
Jaffna.

எ. கே. எஸ்.

நகைமாளிகை

யாழ்ப்பாணம்.

போன் : 519

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org